வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk   மலர் : 05   04.11.2023 திங்கட்கிழமை   இதழ் : 358   பக்கங்கள் : 12




# இந்தியாவிலிருந்து சரக்கு கப்பல் சேவை!

## கடற்றொழில் அமைச்சர்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 04

**இந்தியாவில் இருந்து இலங்கைக்கு சரக்கு கப்பல் போக்குவரத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

சரக்கு கப்பல் சேவைகள் முன்னெடுக் கப்படுமாயின் வட மாகாணத்தில் நியாயமான விலையில் உணவுப் பொருட்களை பெற முடியும் என கிளிநொச்சியில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அத்துடன், புதிததாக முன்மொழியப்பட்டுள்ள கடற்றொழில் சட்ட திருத்தங்கள் மூலம் வெளிநாட்டவர்களின் படகுகள் இலங்கை கடற் பரப்புக்குள் அனுமதிக்கப்படவுள்ளன என்ற கருத்துக்களில் உண்மையில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, நாகபட்டினம் - காங்கேசன்துறை பயணிகள் கப்பல் சேவை பயணிகள் வரவு குறைவால் நிறுத்தப்பட் டது. இந்த கப்பல் சேவையை மீண்டும் ஜனவரியில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிய வருகின்றது. (ஐ)




# வட்டுக்கோட்டை இளைஞருக்கு நீதி கோரி நேற்று போராட்டம்!

யாழ்ப்பாணம், டிசெ. 04

வட்டுக்கோட்டை பொலிஸாரின் சித்ரவதைகளால் உயிரிழந்தார் என்று கூறப்படும் இளைஞருக்கு நீதி கோரி நேற்று வட்டுக்கோட்டையில் கண்டனப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு செல்லும் வீதியில் பொலிஸார் குவிக்கப்பட்டு, வீதித் தடைகள் அமைக்கப்பட்டிருந்தன.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வட்டுக்கோட்டைச் சந்தியில் பிற்பகல் 3 மணியளவில் உயிரிழந்த இளைஞரான நாகராசா அலெக்ஸூக்கு அஞ்சலி செலுத்தி போராட்டம் ஆரம்பமானது.

போராட்டத்தின் போது, 11

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம்:

## இலங்கை தொடுத்த வழக்கை ஏற்றது சிங்கப்பூர் நீதிமன்றம்

கொழும்பு, டிசெ. 04

இலங்கை கடலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலுக்கு சொந்தமான நிறுவனத்துக்கு எதிராக இலங்கை தாக்கல் செய்திருந்த வழக்கை தொடர சிங்கப்பூர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி இந்த வழக்கு சிங்கப்பூர் சர்வதேச வர்த்தக நீதிமன்றத்தில் ஜனவரி 29ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைக்கு முன்னதாக இலங்கை அரசின் 11

10 பிரபல தொழிலதிபர்கள்

## ரூ. 8,000 கோடி கடன் பெற்று அரச வங்கிகளை ஏய்த்தனர்!

கொழும்பு, டிசெ. 04

அரச வங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கியில் சுமார் 8 ஆயிரம் கோடி ரூபாயை கடனாக பெற்றுவிட்டு அதனை செலுத்தவில்லை என்று இலங்கை வங்கி ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பிரபல வர்த்தகர்கள் 10 பேரே இவ்வாறு கடனைப் பெற்று அதனை மீளச் செலுத்தவில்லை. இவர்களின் பெயர்களை வெளியிடுவது பாராளுமன்றத்தின் பொறுப்பு என்று அந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் 11

## வட்டு. இளைஞன் உயிரிழப்பு; நாளை அடையாள அணிவகுப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 04

வட்டுக்கோட்டை இளைஞன் கொலை வழக்கில் நாளை செவ்வாய்க்கிழமை அடையாள அணிவகுப்புக்கு யாழ்ப்பாண நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸாரின் சித்ரவதைக்குள்ளாகி இளைஞர் உயிரிழந்தார் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் விசாரணைகள் நடைபெறுகின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில், கடந்த நவம்பர் மாதம் 8 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய மூன்று பொறுப் பதிகாரிகளை விசாரிக்க 11

மாவீரர் நினைவேந்தல் கைது:

## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் கவலை!

நியூயோர்க், டிசெ. 04

மாவீரர்களை அமைதியாக நினைவுகூர்ந்த தமிழர்கள் பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமை, வடக்கு, கிழக்கில் நினைவேந்தலை தடுக்க பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளதாக அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் பில்ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

அனைத்து மக்களின் சிவில் மனித உரிமைகளை நிலைநாட்டுமாறு நான் இலங்கை 11

## வெப்ப வலய காலநிலை அபிலாசை திட்டம் உலக நாடுகளின் தலைவர்கள் அதிக ஆர்வம்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 04

வெப்ப வலய காலநிலை அபிலாசைகளுக்கான திட்டத்துக்கு மாலைதீவு, கென்யா, பிரேசில் ஆகிய நாடுகளின் ஜனாதிபதிகள் மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எனவே இது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிட ஒரு நிபுணர் குழுவை நியமிக்க முன்மொழிவதாகவும், அந்தக் குழுவின் ஆய்வுகளை 11



## 15,000 படையினர் தப்பியோட்டம் நாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்தும்

கொழும்பு, டிசெ. 04

நாட்டின் முப்படைகளிலிருந்தும் கடந்த 10 மாதங்களில் 15 ஆயிரம் படையினர் தப்பியோடி உள்ளனர். இவ்வாறு தப்பியோடியவர்கள் பலர் ஒப்பந்தக் கொலையாளிகளாக உள்ளனர் என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கடந்த 10 மாதங்களில் முப்படைகளின் 140 அதிகாரிகள் உட்பட 15,360 பேர் பாதுகாப்பு பிரிவிலிருந்து தப்பியோடியுள்ளனர். இதில் இராணுவத்தின் 99 அதிகாரிகளும், கடற்படையின் 11

## ரணிலுக்கு மக்கள் ஆணை இல்லை தன்னிச்சையாக செயல்பட முடியாது

எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 04

மக்கள் ஆணையற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தையோ நீதிமன்றத்தையோ மதிப்பதில்லை.

அரசமைப்பு பேரவைக்கு அழுத்தம் பிரயோகிக்கின்றார். இடைக்கால ஜனாதிபதி ஒருவருக்கு இவ்வாறு தன்னிச்சையாக செயல்பட அதிகாரம் இல்லை என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரி வித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் பணிமனையில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே 11

## இப்படியும் நடக்கிறது

தமிழரசு கட்சிக்கு புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்கான தெரிவுக்கு இருவர் பெயர்கள் பிரேரிக் கப்பட்டிருக்கின்றனவே தவிர, இந்த இருவரும் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை என்று இப் போது விளக்கமளிக்கப்பட்டி ருக்கின்றது.

அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலைவிட அடுத்த வருடம் முதல் மாதத்தில் நடக்கவிருக்கும் தமிழரசு கட்சியின் தலைமைப் பதவிக்கான தேர்தல்தான் இப்போது தமிழ் மக்கள் மத்தியில் அதிகம் பேசப்படும் விடயமாகியிருக்கின் றது.

தமிழரசு கட்சியின் தலைவர் பதவிக்கு விரும்பு கின்றவர்கள் வேட்புமனுத்தாக்கல் செய்வதில்லை என்பதும் ஒருவரின் பெயரை மற்றவர்கள் முன்வைப் பதும்தான் கட்சியின் நியதி. ஆனாலும் கட்சித் தலைவர் பதவிக்காக இரண்டுபேரின் பெயர்களை கட்சியின் வெவ்வேறு உறுப்பினர்கள் முன்மொழிந் தாலும் அங்கே அந்தப் பதவிக்கான தேர்தலே நடை பெறும் என்பதால், அங்கே கட்சிக்காரர்களால் முன் வைக்கப்பட்டது வேட்புமனுத்தானே. ஆனால், அந்த மனுவை வேட்பாளர்கள் தாக்கல் செய்யவில்லைத் தான்.

எது எப்படியோ தலைவர் பதவிக்காக இருவரின் பெயர்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன எனவும் அந்தக் கட்சியில் தலைவர் பதவிக்குப் போட்டியிட தகுதியானவர்கள் பலர் இருப்பதால் அப்படியான முன்மொழிவுகள் வருவது இயல்பானதுதான் என்றும் பதவிக்கு முன்மொழியப்பட் டுள்ளவர்களில் ஒருவ ரான சுமந்திரன் தெரிவித்திருக்கிறார்.

அவர் தமது கட்சியின் பெருமைகளை பேசுவ தற்காக மற்றக் கட்சிகளைப் பற்றியும் பேசவேண் டியது அவசியமானதுதான். அதுதானோ என்னவோ, 'பல கட்சிகளுக்கு இவரை விட்டால் வேறு ஆள் இல்லை என்று வாழ்நாள் தலைவர்களை வைத்துள்ள கட்சிகளைப் போல் அல்லாது எங்களுடைய கட்சி யிலே பலருக்கு அந்த தகுதி இருக்கிறது. பலரின் பெயர் முன்மொழியப்படுகிறது. கட்சியின் அடிப் படை உறுப்பினர்கள் 200இற்கும் மேற்பட்டவர்கள் கூடி வாக்களித்து தலைமையை தீர்மானிப்பார்கள். மிகவும் ஆரோக்கியமான ஒரு விடயமாக நான் அதனை கருதுகிறேன். எவர் வெற்றி பெற்றாலும் மற்றவர்கள் இணைந்து கட்சி அங்கத்தவர்களாக நாங்கள் செயல்படுவோம்' என்றும் சுமந்திரன் தெரி வித்திருக்கிறார்.

தமிழரசு கட்சியில் தலைமைப் பதவிக்கு பலர் தகுதியானவர்கள் இருந்தபோதிலும் எப்போதும் போட்டியில்லாமலே கட்சியின் பெரியவர்கள் தீர்மா னிக்கின்ற ஒருவரே தலைவராக வருவதுதான் வழமை யாக இருந்திருக்கின்றது. அமிர்தலிங்கம் இருக்கும்வரை வேறு எவராலும் வரமுடியாமல் போனதுபோல - அப்போது, மட்டக்களப்பில் 'சொல்லின் செல்வர்' இராசதுரைக்கு தலைவராவதற் கான தகுதி இருந்தபோதிலும் அவரால் வரவே முடிய வில்லை.

அதேபோல, தமிழரசின் மூளை என்று வர்ணிக்கப் பட்ட காவலூர் வி. நவரத்தினத்தாலும் தலைமைப் பதவிக்கு வரமுடியவில்லை. கட்சியிலுள்ள பெரிய வர்கள் யார் தலைவராக வரவேண்டும் என்று விரும்பு கின்றார்களோ அவர்களே வருவதுதான் இதுகால வரை நடந்து வந்திருக்கின்றது.

சில மாதங்களுக்கு முன்னர், கட்சியின் ஒரு முக்கிய தலைவர் ஒருவர், இன்னுமொரு தலைவரிடம் கேட் டாராம், 'அண்ணே, கட்சித் தலைவராக 'அவர்' வந்தால் அவரின் கீழ் நான் பணியாற்றலாம் என்று நீங்கள் கருதுகின்றீர்களா?' என்று.

அவர் எதற்காக அதனைக் கேட்கிறார் என்பதை இவர் அறியாதவர் அல்லவே. அதனால் அவரும் 'நீங் கள் எப்படி அவரின்கீழ் பணியாற்றுவது.' என்றாராம்.

கட்சியின் தலைவருக்குள்ள தகுதி என்ன என்பது தெரியவில்லை. ஒரு காலத்தில் சட்டம் தெரிந்திருக்க வேண்டும் என்பது எழுதப்படாத விதியாக இருந் ததோ தெரியவில்லை. ஆனால், இப்போது அப்படி யல்லத்தான்.

இருந்தாலும், தமது கட்சியில் தலைமைப் பத விக்கு பொருத்தமானவர்கள் பலர் இருக்கிறார்கள் என்றும் அப்படியான நிலைமையில் யார் வெற்றி பெற்றாலும் மற்றவர்கள் இணைந்து கட்சி அங்கத்த வர்களான நாங்கள் செயல்படுவோம் என்றும் சுமந்தி ரன் தெரிவித்திருப்பது தமிழரசுக்காரர்களுக்கு ஆறுதலான செய்திதான்.!

- ஊர்க்குருவி.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலை கர்தினால் அரசியலாக்குகிறார்!

### மகிந்தானந்த எம். பி. கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 04

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்தை பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண் டகை அரசியலாக்குகிறார். பாதிக் கப்பட்டவர்களுக்கு நிலையான நீதி கிடைக்க வேண்டுமாயின் நீதிமன்ற செயல்பாடுகளுக்கு இடமளிக்க வேண்டும் என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தா னந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சனிக் கிழமை உரையாற்றியபோதே மேற் கண்டவாறு கூறிய அவர், மேலும் கூறியவை வருமாறு,

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக் குதல் சம்பவத்தில் கத்தோலிக்க சமூகத்தினருக்கும் பேராயர் கர்தி னால் ஆண்டகைக்கும் அரசாங்கம் நியாயத்தை வழங்கியுள்ளது. பல ருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று நீதிய மைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

குண்டுத்தாக்குதல் சம்பவத்தை அரசியலாக்குவது முற்றிலும் தவ றானது. பேராயர் கர்தினால் மல் கம் ரஞ்சித் ஆண்டகை உட்பட கத் தோலிக்க சமூகத்தினர் இந்த விட யத்தை அரசியலாக்க முயற்சிக்கி றார்கள். இதனை முன்னிலைப் படுத்தி அரசியல் இலாபம் தேட முயற்சிக்கின்றீர்கள். கத்தோலிக்க மக்களை ஒரு கட்டத்துக்குள் கொண்டு வரப் பார்க்கின்றீர்கள்.

அடிப்படைவாத முஸ்லிம் தரப் பினர் சிங்களவர் ஒருவரை தலைவ ராகக் கொண்டுவர தாக்குதல் நடத் தியதாக குறிப்பிடுகின்றீர்கள். சாதா ரண அறிவு உள்ளவர்கள்கூட இந் தக் கருத்தின் உண்மையை அறி வார்கள்.

ஆகவே, நண்பர் சாவிந்த ஜெ யவர்த்தன இந்த விடயத்தை அர சியலாக்க வேண்டாம். பேராயர் கர்தினால் குண்டுத்தாக்குதலை அரசியலாக்குகிறார். கத்தோலிக்க சமூகத்தினருக்கு நியாயம் கிடைக்க வேண்டுமாயின் நீதிமன்ற செயல் பாடுகளுக்கு இடமளியுங்கள் - என் றார். (ஐ)

# ஜனாதிபதியின் ஆலோசகர்களுக்கு ரூ. 22 இலட்சம் மாதாந்த கொடுப்பனவு

கொழும்பு, டிசெ. 04

ஜனாதிபதி ஆலோசகர்களாக பணியாற்றும் 15 பேருக்கான மாதாந்த செலவு சுமார் 22 இலட் சம் ரூபாய் என்று ஜனாதிபதி பணி மனையால் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆவ ணத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது.

கொடுப்பனவுகள் உட்பட 21 இலட்சத்து 98 ஆயிரத்து 837 ரூபாய் கடந்த மாதம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பொருளாதார நிலைப்படுத்தல் மீட்சி மற்றும் வளர்ச்சி ஆகியன தொடர்பான ஆலோசகருக்கு 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய். ஊடகம் மற்றும் தொடர்பாடல் ஆலோசகருக்கு 2 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாயும் விஞ்ஞான விவ கார ஆலோசகருக்கு ஒரு இலட் சத்து 90 ஆயிரம் ரூபாயும் வழங் கப்படுகின்றன.

இதில் இரண்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரு பெண் உறுப்பினரும் அடங்கு வர். இந்த மூவருக்கும் எம்.பியின் ஓய்வூதியம் உண்டு.

ஜனாதிபதியின் ஆலோசகர்க ளின் எண்ணிக்கை 23 பேர். இவர் களில் எட்டு பேர் சம்பளம் அல் லது கொடுப்பனவு பெறாமல் பணி யாற்றுகின்றனர் என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

# ஹந்தானையில் வழிதவறிய 150 மாணவர்கள் மீட்கப்பட்டனர்!



கொழும்பு, டிசெ. 04

ஹந்தானை மலைத்தொடரில் காணாமல் போன களனி பல்க லைக்கழகம் மற்றும் ராகம மருத் துவ பீட மாணவர்கள் மீட்கப்பட் டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை சுமார் 180 மாணவர்கள் ஹந்தானை மலைத்தொடரில் ஏறியுள்ளனர்.

இந்த நிலையில், இவர்களில் 150 பேர் வழிதவறி சென்றுள்ளனர். இவர்கள் கண்டி பொலிஸார் மற் றும் இராணுவத்தினரால் மீட்கப் பட்டனர்.

ஹந்தானை மலையிலிருந்து மாலையில் திரும்பும் போது கடும் மழை மற்றும் இருள் சூழ்ந்ததால் மாணவர்கள் வீதியைக் கண்டு பிடிக்க முடியாத நிலை ஏற்பட்ட தாக பொலிஸார் தெரிவித்தனர்.

# தியான பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.04

நாளை செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை, பண்டதரிப்பு பாத்திமா ரிட்ரீட் ஹவுஸ் மண்டபத்தில், விபஸ்ஸனா தியான பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.

குருஜி எஸ். என். கோயங்கா வின் வழிவந்த தியான ஆசிரியர்கள் மோகன், இராமசந்திரன், திருமதி ஜானகி சுப்பிரமணியம் மற்றும் சிறுவர்களுக்கான தியான ஆசிரி யர்களான பாலசந்திரன் கிருஷ்ண மூர்த்தி, சரவணன் செல்வராஜ், திருமதி சத்தியவாணி முருகன் ஆகியோர் ஒன்றிணைந்து, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் இப்பயிற்சி நெறியை நடத்துகின் றனர் . இப் பயிற்சிநெறியில் கலந்து கொள்ளும் 18 வயதிற்கு மேற்பட்ட வர்களுக்கு அனைத்து தியான நிகழ்ச்சிகளும் உணவும், தங்குமிட வசதிகளும் இலவசமாக வழங்கப் படவுள்ளன.

மன தூய்மைக்கான இந்தத் தியான பயிற்சிநெறியில் அனை வரும் கலந்து கொள்ளமுடியும். பங்கேற்க விரும்புவோர் www.setu. dhamma.brg மற்றும் www.shbbha. dhamma.brg என்ற இணையதளங் களில் முன்பதிவு செய்யலாம். மேலும் தகவல்களுக்கு 077 3504491, 071 6439454 எண்களில் தொடர்புகொள்ளலாம்.

# நகைகள், பணம் திருடிய மூவர் சந்தேகத்தில் கைது!

கொழும்பு, டிசெ. 04

தெஹிவளை பிரதேசத்தில் மருத்துவர்கள், சட்டதரணிகளின் வீடுகளில் பணம் மற்றும் பொருட் களை திருடிய சந்தேகத்தில் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளனர்.

இவர்களால் திருடப்பட்டதா கக் கூறப்படும் 20 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் மற் றும் போதைப்பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர்களால் திரு டப்பட்டவற்றில் தங்க நகைகள், மடிக்கணினிகள், தையல் இயந்தி ரம், பழங்கால பித்தளை பொருட் கள், கைத்தொலைபேசிகள், கறுப் புக் கண்ணாடிகள், சுவர் துளையிடும் இயந்திரங்கள் என்பனவும் பொலி ஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ)

# 433 யானைகள் 2022இல் கொலை!

கொழும்பு, டிசெ. 04

சுற்றுச்சூழல், இயற்கை வளங் கள் மற்றும் நிலையான வளர்ச்சிக் கான துறைசார் கண்காணிப்புக் குழுவின் கூற்றுப்படி, மனித - யானை மோதலால் கடந்த ஆண்டு 433 யானைகள் உயிரிழந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

காட்டு யானை - மனித மோதலை தடுக்கும் வகையில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வேலைத்திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்து மாறு குழுவின் தலைவரும் கம் பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப் பினருமான அஜித் மன் னப்பெரும வேண்டுகோள் விடுத் துள்ளார்.

ஈழநாடு
Eelanadu
04.12.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், கார்த்திகை 18

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சர்வதேச கட்டமைப்புகளின் பலவீனம்

சர்வதேச கட்டமைப்புகளின் மீது அதீதநம்பிக்கை வைப்பது இறுதியில் அவநம்பிக்கையிலேயே முற்றுப்பெறும். இந்த உண்மை மீண்டும் ஒரு முறை நிரூபணமாகியிருக்கின்றது. இஸ்ரேல் - ஹமாஸ் இடையே மீண்டும் போர் ஆரம்பித்திருக்கின்றது. கைதிகள் பரிமாற்றத்தை கருத்தில் கொண்டு இரண்டு தரப்புகளுக்கும் இடையில் போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டிருந்தது. இந்த போர் நிறுத்தம் நீடிக்கும் என்று பல்வேறு தரப்புகளும் எதிர்பார்த்திருந்தபோதும் அது நடைபெறவில்லை.

இஸ்ரேல், காஸா மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றபோதும் - மறுபுறம் ஹமாஸ௺ம் யுத்தத்தை தொடர்வதிலேயே விருப்பம் கொண்டிருக்கின்றது. ஹமாஸை பொறுத்தவரையில் காஸா மக்கள் அதிகளவில் கொல்லப்படும்போது அதுவே அவர்களுக்கான பலமான ஆதரவுத் தளமாகவும் - அவர்களின் தேவையை நியாயப்படுத்துவதற்கும் பயன்படுமென்றும் கருதுகின்றது. பொதுவாக யுத்தங்களில் மக்கள் கொல்லப்படும்போது பாதிக்கப்படும் மக்கள் அந்தக் கொலைக்கு காரணமானவர்கள் மீதே தீராத பகையை கொள்வர். இதுவே, இதுவரையான யுத்த வரலாறுகள் நமக்கு போதிக்கும் உண்மையாகும்.

இஸ்ரேல் மீதான யுத்தத்தை ஹமாஸ் அமைப்பே ஆரம்பித்தது. இந்த பின்புலத்தில் நோக்கினால் இந்த யுத்தத்தை ஹமாஸ் விரும்பியது. அதன் விருப்பத்துக்கு ஏற்றவாறே யுத்தம் தற்போது இடம்பெறுகின்றது. உண்மையில் இது யாருக்கான வெற்றி என்பதிலும் கேள்விகள் உண்டு. இஸ்ரேலை பொறுத்தவரையில் யுத்தத்துக்கு செல்வதைத் தவிர வேறு தெரிவுகள் இல்லை. ஏனெனில், மத்திய கிழக்கு பகுதியில் தங்களை ஒரு பலவானாகக் கட்டமைத்திருக்கும் இஸ்ரேல் பின்வாங்க முடியாது. அவ்வாறு பின்வாங்கினால் ஹமாஸிடம் தோற்பதான தோற்றமொன்று இஸ்ரேல் மக்களுக்கு கிடைக்கும்.

ஆனால், இங்கு கவனிக்க வேண்டிய விடயம் வேறு. வன்னி யுத்த முனையிலும் இதுதான் நடந்தது. அதாவது, யுத்தத்தைத் தடுப்பதற்கு எந்தவொரு நாடும் முயற்சிக்கவில்லை. ஏனெனில் ஒரு தடை செய்யப்பட்ட அமைப்பின் மீது அரசு யுத்தத்தை தீவிரப்படுத்தும்போது பொதுமக்களை காப்பாற்றும் நோக்கில் மனிதநேய தலையீடுகளை செய்வதற்கு எந்தவொரு சர்வதேச ஏற்பாடும் இல்லை.

ஐ. நா. பாதுகாப்பு பேரவையின் ஏகமனதான தீர்மானத்துக்கு அமைவாக ஆர். 2 பி எனப்படும் பாதுகாப்பதற்கான உரிமையை ஐ. நா. பிரயோகிக்க முடியும்தான் - ஆனால், அதனை மேற்கொள்வதாக இருந்தாலும்கூட பலம் பொருந்திய நாடுகளின் ஆதரவு தேவை. பாதுகாப்பு பேரவையின் 'வீற்றோ' நாடுகள் ஏகமனதாக அதற்கு தலையசைக்க வேண்டும். ஆனால், தற்போதுள்ள உலக ஒழுங்கில் அது முயல் கொம்பாகும். ஏனெனில், உலகம் அதிகம் பிளவுற்றிருக்கின்றது. அமெரிக்கா ஆதரிக்கும் ஒன்றை சீனாவும் ரஷ்யாவும் ஆதரிக்காது - அவர்கள் ஆதரிப்பதை அமெரிக்காவும் பிரித்தானியாவும் பிரான்ஸ௺ம் ஆதரிக்காது. இந்த நிலையில் யுத்தத்தில் அகப்படும் அப்பாவி மக்களை காப்பாற்ற எவரும் இல்லாத உலகமே எஞ்சுகின்றது.

இதனைப் புரிந்து கொண்டுதான் ஒவ்வொரு பாதிக்கப்பட்ட இனமும் தங்களுக்கான அரசியலை தூர நோக்குடன் அணுக வேண்டும். வெறுமனே சர்வதேச கட்டமைப்புகள் மீது அதீதநம்பிக்கை கொண்டு, காலத்தை துல்லியமாக -மதிப்பிட்டு கையாளாது போனால் - பின்னர் மற்றவர்கள் மீதான குற்றச்சாட்டே மிஞ்சும். அதுதான், இப்போது தமிழ் சூழலில் நடந்து கொண்டிருக்கின்றது. எதற்கெடுத்தாலும் மற்றவர்கள் மீது குற்றஞ்சாட்டுவது இறுதியில் அனைவருமே எதிரிகளாக மட்டும் தெரிவர். எதிரிகளின் உலகத்தில் தனித்து நின்று ஈழத் தமிழினத்தால் எதைச் சாதித்துவிட முடியும்?

இஸ்ரேல் -ஹமாஸ் யுத்தம் மீண்டும் ஒருமுறை சர்வதேச கட்டமைப்புகளின் பலவீனத்தை அம்பலப்படுத்தியிருக்கின்றது. யுத்தத்தை நிறுத்த வேண்டுமென்று பல நாடுகள் விரும்பினாலும்கூட அதனை நடைமுறைப்படுத்த எவராலும் முடியவில்லை.

# நிபந்தனைகளை அறிந்து கையொப்பமிடுங்கள்!

## மத்திய வங்கி அறிவுறுத்து

கொழும்பு, டிசெ. 04

எந்தவொரு நிதி நிறுவனங்களிடம் இருந்தும் பெற்றுக்கொள்ளப்படும் சேவைகளுக்காக அந்த நிறுவனங்களால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைகளை நன்கு அறிந்து கையொப்பமிடுமாறு இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் சுஜிதா ஜெகஜீவன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், சில நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை நன்கு அறியாமல், அதற்கு சிலர் ஒப்புதலை வழங்குகின்றனர்.

ஆகையால் எந்தவொரு நிதி நிறுவனங்களின் ஆவணங்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் அறிவுறுத்தல்களை அறிந்துகொள்ளுமாறு அவர் கூறியுள்ளார். (ஐ)

# சுகாதாரமற்ற உணவு விற்பனை 14 கடைகளுக்கு எதிராக வழக்கு

கொழும்பு, டிசெ. 04

சுகாதாரமற்ற முறையில் வீதியோரம் உணவுகளை விற்பனை செய்த 14 கடைகளுக்கு எதிராக கடுவலை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொட்டாவை, தலவத்துகொடை மற்றும் கிம்புலாவல பகுதிகளில் மஹரகம பொது சுகாதார பரிசோதகர்களால் 55 தெருவோர உணவு விற்பனை செய்யும் கடைகள் சனிக்கிழமை இரவு சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது, மனித பாவனைக்கு உதவாத உணவு பொருட்களை வைத்திருத்தல், பாதுகாப்பற்ற முறையில் உணவுகளை பராமரித்தல், பழுதடைந்த உணவுப் பொருட்களை வைத்திருத்தல், சுகாதாரமற்ற முறையில் உணவு தயாரித்தல், உணவு தயாரிப்பவர்கள் பொருத்தமான ஆடைகளை அணியாதிருத்தல் போன்ற செயல்பாடுகளுக்கு பொதுச் சுகாதார பரிசோதகர்களால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொட்டாவை பிரதேசத்தில் மனித பாவனைக்கு உதவாத 12 கிலோ கோழி இறைச்சி மற்றும் பழுதடைந்த ஜூஸ் போத்தல்கள் என்பன பொது சுகாதார பரிசோதகர்களால் அழிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாலியல் ஊக்க மருந்துகளுடன் சந்தேகநபர் கொழும்பில் கைது

கொழும்பு, டிசெ. 04

இந்தியாவிலிருந்து மீன்பிடி படகின் மூலம் சட்ட விரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட பாலியல் ஊக்க மருந்துகளுடன் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவுக்கு உட்பட்ட மேல் மாகாண ஊழல் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு 12, வாழைத் தோட்டம் பகுதியைச் சேர்ந்த 61 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் வீட்டை சோதனையிட்டபோது 31 ஆயிரத்து 750 பாலியல் ஊக்க மருந்துகளும் 259 பாலியல் ஊக்கி ஜெல் பைக்கெற்றுகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

மீட்கப்பட்ட பொருட்கள் வேறு ஒருவருக்கு கைமாறும் வரை அவரது வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் மாளிகாகந்தை நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார். (ஐ)

# சீரற்ற காலநிலையால் 75 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 04


சீரற்ற காலநிலையால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் 75 குடும்பங்களை சேர்ந்த 221 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், அந்த பகுதிகளில் ஏழு வீடுகள் பகுதியவில் சேதமடைந்துள்ளன.

வெள்ளப்பெருக்கு மற்றும் கடும் காற்றினால் குறித்த பகுதிகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று, ஒட்டுச்சுட்டான் மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். புது வேலை அமையும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**இடபம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயமும் உண்டு. புதிய அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை நீங்களே செய்து முடிப்பது நல்லது.உத்தியோகத்தில் சிறுசிறு அவமானங்கள் வந்து நீங்கும். தர்மசங்கடமான சூழல்களை சமாளிக்க வேண்டிய நாள்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் வரக்கூடும். கவனம் தேவைப்படும் நாள்.

**கன்னி**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். நன்மை நடக்கும் நாள்.

**துலாம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். வியாபாரம் தழைக்கும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**விருச்சிகம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் அளவாக பழகுங்கள். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**மகரம்**
கடினமான காரியத்தையும் எளிதாக செய்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். நல்லன நடக்கும் நாள்.

**கும்பம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. பிரபலங்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார். தொட்டது.

**மீனம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவுகள் நனவாகும் நாள்.

# 'மிக்ஜாம்' புயல் நாளை தமிழகத்தை கடக்கும்

**சென்னை, டிசெ. 04**

**வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறியுள்ளது. இது நாளை வட தமிழகத்தை கடக்கும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.**

வங்கக் கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மிக்ஜாம் புயலாக மாறியது என்றும், சென்னையில் இருந்து 310 கி.மீ. தென்கிழக்கு திசையில் புயல் நிலைகொண்டுள்ளது என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நேற்று மிக்ஜாம் புயலாக வலுப்பெற்றது. சென்னையில் இருந்து 310 கி.மீ. தென்கிழக்கு திசையில் புயல் நிலைகொண்டுள்ளது. வட மேற்கு திசையில் நகர்ந்து மேலும் வலுப்பெற்று வட தமிழகத்தை நோக்கி புயல் நகரும்.

இந்தப் புயல் நாளை முற்பகலில் நெல்லூர் - மசூலிப்பட்டினம் இடையே புயலாகக் கரையை கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புயலால் சென்னை, கடலூர், எண்ணூர், காட்டுப்பள்ளி, புதுச்சேரிக்கு மூன்றாம் எண் எச்சரிக்கையும், நாகை, காரைக்கால், பாம்பன், தூத்துக்குடிக்கு 2ஆம் எண் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

சென்னை உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்யும். எனவே, மக்கள் ஒருசில நாட்களுக்கு தேவையான உணவு, நீர் மற்றும் மருந்துகளை கையிருப்பில் வைத்துக் கொள்ளுமாறு தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

# அ. தி. மு. கவிலிருந்து சசிகலா நீக்கம் செல்லுமா செல்லாதா?

## இன்று நீதிமன்றம் தீர்ப்பு

*சென்னை, டிசெ. 04*

அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பதவியில் இருந்தும், கட்சியில் இருந்தும் சசிகலாவை நீக்கியது செல்லுமா, செல்லாதா என்பது குறித்து உயர் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை தீர்ப்பளிக்கவுள்ளது.

அ. தி. மு. க. பொதுச்செயலாளராக இருந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மரணத்துக்கு பிறகு இடைக்கால பொதுச் செயலாளராக வி. கே. சசிகலாவும், துணைப் பொதுச் செயலாளராக தினகரனும் தெரிவாகினர்.

பின்னர் கடந்த 2017இல் நடைபெற்ற அ. தி. மு. க. பொதுக்குழுவில் சசிகலா மற்றும் தினகரன் கட்சியில் இருந்து நீக்கப்பட்டு, அ. தி. மு. கவில் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் உருவாக்கப்பட்டன.

பொதுச் செயலாளர் பதவியில் இருந்து தன்னை நீக்கியதை எதிர்த்தும், அ. தி. மு. க.வில் இருந்து நீக்கியதை எதிர்த்தும், புதிதாக பதவிகள் உருவாக்கப்பட்டதை எதிர்த்தும் சசிகலா சென்னை பெருநகர உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை நிராகரிக்கக் கோரி ஒருங்கிணைப்பாளராக இருந்த ஓ.பன்னீர்செல்வமும், இணை ஒருங்கிணைப்பாளராக இருந்த பழனிசாமியும் தாக்கல் செய்த மனுவை ஏற்ற உரிமையியல் நீதிமன்றம், சசிகலா தொடர்ந்திருந்த வழக்கை நிராகரித்தது.

இந்த உத்தரவை எதிர்த்து வி. கே. சசிகலா சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார். இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், என். செந்தில்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வில் கடந்த மாதம் தொடர்ச்சியாக நடந்தது.

இந்த வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களும் முடிவடைந்த நிலையில் நீதிபதிகள் தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் தள்ளிவைத்திருந்தனர். இந்நிலையில் இந்த வழக்கில் வி. கே. சசிகலாவை அதிமுகவில் இருந்து நீக்கியது செல்லுமா, செல்லாதா என்பது குறித்து நீதிபதிகள் இன்று தீர்ப்பளிக்கவுள்ளனர். (ஐ)

# காவிரி முதல் கங்கை வரையான பாரம்பரியத்தை மீட்கவேண்டும்!

## தமிழக ஆளுநர் தெரிவிப்பு


*சென்னை, டிசெ. 04*

காசி தமிழ் சங்கமம் வாயிலாக காவிரி முதல் கங்கை வரையான பாரம்பரிய தொடர்புகளை மீட்டெடுக்க வேண்டும் என்று ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்தார்.

ஒரே பாரதம் உன்னத பாரதம் எனும் திட்டத்தின்கீழ் பண்டைய இந்தியாவில் கலாசார மையங்களாக திகழ்ந்த தமிழகத்துக்கும், உத்தரப் பிரதேசத்தின் வாராணசிக்கும் இடையே உள்ள உறவை புதுப்பிக்கும் நோக்கத்தில் காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சிக்கு மத்திய அரசு கடந்த ஆண்டு ஏற்பாடு செய்தது இதன் அடுத்த நிகழ்வு குறித்து பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், மார்கழி மாத திருவிழாக்களில் ஒன்றாக காசி சங்கமம் இணைந்துள்ளது. பண்டிகை காலங்களில் இந்தியா என்பது ஒரே பாரதமாக இருந்தது. கடந்த 10 ஆண்டுகளில் பல்வேறு மாற்றங்கள் இந்தியாவில் நடைபெற்று வருகின்றன. அறிவியல், தொழில்நுட்பம், சுற்றுச்சூழல், பாதுகாப்பு என அனைத்து துறைகளிலும் இந்தியா வளர்ந்து வருகிறது. நம் நாடு வளர்ச்சிப் பாதையில் பயணிக்க அனைவரும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும். அந்த வளர்ச்சியும் நிலையானதாக இருக்க வேண்டும்.

அதைச்செய்ய இந்தியாவின் கலாச்சாரத்தை முழுமையாக கடைப்பிடிக்க வேண்டும் என்பதை புரிந்து மத்திய அரசு செயல்பட்டு வருகிறது. காசிக்கும், தமிழகத்துக்கும் ஆயிரம் ஆண்டுகால பாரம்பரிய தொடர்புள்ளது. இவை எல்லாம் ஆங்கிலேயர்கள் ஆட்சிக்கு பிறகு மறைந்துவிட்டது. எனவே, கங்கை முதல் காவிரி வரை ஏற்கெனவே இருந்த தொடர்புகளை நாம் மீட்டெடுக்க வேண்டும். காசி தமிழ் சங்கமம் என்பது ஒரு தேசிய பண்டிகை போல உருவாக வேண்டும். காசியில் மட்டுமின்றி தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டும் - என்றார்.



# அராலி முதல் பொன்னாலை வரை 354 ஏக்கரை அபகரிப்பதற்கு திட்டம்!

## சித்தார்த்தன் எம். பி.

கொழும்பு, டிசெ. 04

**சங்கானை பிரதேச செயலகத்தில் அராலி தொடக்கம் பொன்னாலை வரை ஏறக்குறை 10 கிலோமீற்றர். அங்கு என்ன நடக்கின்றது என்றால், வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினர் 'வன ஜீவராசிகள்' என்பதை விட்டுவிட்டு 'வன வளங்கள் பாதுகாப்பு' என அந்த இடங்களுக்கு ஏற்றவாறு பெயர்களை மாற்றி, அதனை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர பார்க்கின்றார்கள் என்று பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் நீதி அமைச்சுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஏறக்குறைய 354 ஏக்கர். 07 மயானங்கள், விளையாட்டுத் திடல்கள், தனியார் காணிகள் எல்லாமே அதற்குள் அடங்குகின்றன. இதுபற்றி அரச அதிபர் சங்கானை பிரதேச செயலாளரை கேட்டிருக்கின்றார். பொதுமக்களையும் பொது அமைப்புகளையும் அழைத்து இது சம்பந்தமான அவர்களுடைய அபிப்பிராயங்களை எடுக்கும்படி, அங்கு சென்ற எல்லோருமே அதை செய்யக்கூடாது என்றே சொல்லியிருக்கின்றார்கள்.

ஏனென்றால், பின்பு அப்பகுதி கடலில் மீன்பிடிக்க செல்பவர்கள் அங்கு செல்ல முடியாமல் போகும். அந்த மயானங்களை பாவிக்க முடியாமல் போகும். காரணம், வன வளங்கள் பாதுகாப்பு என்று அவர்கள் மீனவர்களை விடமாட்டார்கள்.

இது மாத்திரமல்ல, ஜனாதிபதி சொல்லியிருக்கிறார், அமைச்சர்கள் சொன்னார்கள், 85ஆம் ஆண்டுக்கு முந்தைய நிலைமைக்குத் தான் கொண்டு செல்லப் போகின்றோம் என்று. ஆனாலும் அங்கு இந்த விடயம் நடந்துகொண்டிருக்கிறது. அவற்றை வனஜீவராசிகள் பாதுகாப்பு வலயமாக எடுப்பதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

நிச்சயமாக இவை எல்லாம் நிறுத்தப்பட வேண்டும். ஏனென்றால், தமிழ் மக்களை பொறுத்தமட்டில் நம்பிக்கையை உருவாக்க வேண்டியது உங்களுடைய கடமை. எனவே, அதை கட்டாயமாக செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்- என்றார். (ஐ)



வடலியடைப்பை சேர்ந்த ஆசிரியர் சபிசா குலேந்திரராஜா மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி பி. சிவகுமார் முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

# தொழில் முனைவோருக்கு 2 சதவீத வட்டியில் கடன்!

கொழும்பு, டிசெ. 04

இரண்டு வீத கடன் வட்டி நிவாரணத்தின் கீழ் தொழில் முனைவோருக்கு தேவையான மூலதனத்தை வழங்குவதாக சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்துள்ளார்.

இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து 3 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 2.8 வீதமான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் பணி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

2028ஆம் ஆண்டிற்குள் தொழில் முனைவோர் எண்ணிக்கையை 10 வீதமாக உயர்த்துவதே இதன் இலக்கென - அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# செட்டிக்குளம் தம்பதி கொலை 19 வயதான சந்தேகநபர் கைது!

வவுனியா, டிசெ. 04

செட்டிக்குளத்தில் முதிய தம்பதியை கொன்று 10 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் தங்க நகைகளை கொள்ளையடித்தார் என்ற சந்தேகத்தில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான 19 வயது இளைஞனை, கிளிநொச்சி உருத்திரபுரத்தில் வைத்து கைது செய்துள்ளதாக செட்டிக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை அதிகாலை வியாபார நிலையத்துடன் இணைந்ததாக உள்ள கட்டடத்தில் வசித்த முதிய தம்பதியரான பசுபதி வர்ணகுலசிங்கம் (வயது 70), வர்ணகுலசிங்கம் நாகலஷ்மி (வயது 68) என்பவர் உயிரிழந்து காணப்பட்டனர். இது தொடர்பில், செட்டிக்குளம் பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்தனர். அதில் தெரியவந்தவை வருமாறு,

வர்த்தகர் தன்னுடைய வர்த்தக நிலையத்தை மூடுவதற்கு தயாராகிக்கொண்டிருந்த போது, அந்த வர்த்தக நிலையத்துக்கு இரகசியமாக நுழைந்த சந்தேகநபர் அங்கு மறைந்து இருந்துள்ளார். வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு சென்றதன் பின்னர், வர்த்தக நிலையத்தை நோட்டமிட்டு, பண பெட்டகத்துக்கு அருகில் சென்றுள்ளார்.

எனினும், வர்த்தக நிலையத்துக்குள் யாரோ நடமாடுவதை உணர்ந்த, வர்த்தகரின் தந்தை சத்தம் போட்டுள்ளார். அதன் பின்னரே, இருவரையும் படுகொலை செய்து விட்டு பணம், நகையை கொள்ளையிட்டு சந்தேகநபர் தப்பி சொந்தஊருக்கு திரும்பியுள்ளார் என்று அறிய வருகின்றது. (ஐ)

# போலி வீசாக்கள் மூலம் இத்தாலி செல்ல முயன்ற பெண்கள் கைது!

கொழும்பு, டிசெ. 04

மோசடியான முறையில் தயாரிக்கப்பட்ட வீசாக்களை பயன்படுத்தி இத்தாலி செல்ல முயன்ற இலங்கை பெண்கள் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய பெண் எனவும், மற்றைய பெண் யாழ்ப்பாணம் வெல்வெட்டித்துறை பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய பெண் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருவரும் கட்டார் எயார்வேஸ் விமானத்தில் டோஹா நோக்கி அதிகாலை 03.25 மணிக்கு புறப்படுவதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வந்துள்ளனர்.

அங்கு, விமான அனுமதிக்காக அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களில் சந்தேகம் அடைந்த கட்டார் ஏர்வேஸ் அதிகாரிகள், இருவரையும் விமான நிலைய குடிவரவு மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டு பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அங்கு நடத்தப்பட்ட விசாரணைகளின் போது, தவறான தகவல்களை உள்ளடக்கி மோசடியான முறையில் இந்த இத்தாலி வீசாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று தெரிய வந்துள்ளது.

இதன்படி, குடிவரவு மற்றும் குடியகல்வு எல்லைக் கட்டுப்பாட்டு பிரிவினரால் கைது செய்யப்பட்ட இந்த இரண்டு பெண்களும் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்கா விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவ்வருடத்தில் வட மாகாணத்தில் வசிப்பவர்கள் மோசடியான ஆவணங்களைப் பயன்படுத்தி ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல மேற்கொண்ட 10 முயற்சிகள் கட்டுநாயக்கா விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வு எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் முறியடிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், ஐரோப்பாவுக்கு செல்லும் வட மாகாண வாசிகள் டோஹா மற்றும் டுபாய் குடிவரவு அதிகாரிகளால் மேலும் பல சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டு அவர்களை மீண்டும் இந்த நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கிளிநொச்சிக்கு குடிதண்ணீர் விநியோகம் குறித்து உரையாடல்!

கிளிநொச்சி, டிசெ. 04

கிளிநொச்சி மாவட்டத்துக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரை வழங்குவதற்காக நீரை பெற்றுக்கொள்ளும் குளமான கிளிநொச்சி குளத்தின் நீரேந்து பகுதிகளை பாதுகாக்கும் கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக கிளிநொச்சி குளத்திலிருந்து நீர் பெற்றுக்கொள்ளப்படுகிறது. கிளிநொச்சி குளத்துக்கு இரணைமடு இடதுகரை வாய்க்கால் மூலமும், கனகாம்பிகைகுளம் வான் பாய்கின்ற போது ரை ஆறு ஊடாக வருகின்ற நீரும் வந்து சேர்கிறது. ஆனால், இந்த நீரேந்து பிரதேசங்கள் தொடர்ச்சியாக மாசடைந்து பாதுகாப்பற்ற பிரதேசங்களாக மாறி வருகிறது. குறித்த பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் பெறப்பட்ட அறிக்கைகளின் ஊடாக இது நிரூபிக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக மாவட்ட மருத்துவமனையின் கழிவகற்றல் நடவடிக்கையில் ஏற்படுகின்ற குறைபாடுகள் காரணமாக ஆபத்தான கழிவுகள் ரை ஆறு ஊடாக கிளிநொச்சி குளத்தை அடைகிறது. அத்தோடு தற்போது அமைக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண விசேட மகப்பேற்று மருத்துவமனையிலும் முறையான கழிவகற்றல் பொறிமுறை ஸ்தாபிக்கப்படாத நிலையில் அதனால் எதிர்காலத்தில் வெளியாகும் ஆபத்தான மருத்துவக் கழிவுகளும் கிளிநொச்சி குளத்தை அடையும்.

மேலும் ரை ஆறு பகுதிகளில் குப்பைகள் ) உட்பட பல கழிவுகள் கொட்டப்படுகின்றமை, கிளிநொச்சி குளத்திற்கும் அதன் நீரேந்து பகுதிகளுக்கும் என ஒதுக்கப்பட்ட நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதும் அதனால் ஏற்படும் கழிவுகளும் மற்றும் கிளிநொச்சி நகர், சேவை சந்தைகளின் கழிவுகள் இரத்தினபுரம் பாலத்திற்கு ஊடாக கிளிநொச்சி குளத்திற்கு செல்வது, அறிவியல் நகர் தொழில் பேட்டை பிரதேசமாக காணப்படுவதனால் அங்கிருந்து வெளியேறும் கழிவுகள் கனகாம்பிகைகுளத்தின் ஊடாக ரை வழியாக கிளிநொச்சி குளத்தை அடைதல், நகரத்தில் உரிய முறையில் மலசல கூடங்கள் அமைக்கப்படாமை உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் கிளிநொச்சி குளம் மாசடைந்து வருகிறது.

இதன் காரணமாக மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்காக நீரை குறித்த குளத்திலிருந்து பெறுகின்ற போது அதனை சுத்திகரிக்க அதிகரித்த செலவுகள் ஏற்படுகிறது. இதன் காரணமாக பொது மக்களுக்கு சீராக நீர் வழங்க முடியாத நிலையும் அவ்வப்போது ஏற்படுகிறது. இதன் காரணமாக கிளிநொச்சி குளத்தின் நீரோந்து பகுதிகளை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொறியியலாளர் எஸ்.சாரங்கன், 2024 ஜனவரி மாதம் நவீன தொழில்நுட்பத்துடன் அமைக்கப்பட்டுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையம் தனது செயற்பாடுகளை ஆரம்பிக்கும் போது எவ்வாறான மாசடைந்த நீரையும் சுத்திகரித்து வழங்க முடியும் ஆனாலும் நீரின் மாசு அதிகரிக்க அதிகரிக்க சுத்திகரிக்கும் செலவுகளும் அதிகரித்துச் செல்லும் எனவும் தெரிவித்தார்.

இதனையடுத்து கிளிநொச்சி குளத்தின் நீரோந்து பகுதிகளை எல்லைக் கல் இட்டு அடையாளப்படுத்துவது எனவும் இதனை நீர்ப்பாசனத் திணைக்களம், பிரதேச செயலகம் என்பன மேற்கொள்ளவும், குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தடவை நீர் பாதுகாப்பு தொடர்பாக கலந்துரையாடலை மேற்கொள்வதற்கும் இதற்கமைவாக தொடர்பாடல்களை இலகுவாக மேற்கொள்ளும் பொருட்டு வட்ஸ்அப் குழு ஒன்றை உருவாக்கவும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. (ஐ)

# கைத்தொழில் துறையை ஊக்குவிக்க இந்தியா, சீனா உதவியை நாடுங்கள்!

## ரிஷாத் பதியுதீன் எம். பி.



கொழும்பு, டிசெ. 04

**கைவிடப்பட்டு வரும் கைத்தொழில் துறையை ஊக்குவிப்பதற்கு கொரியா, ஜப்பான், சீனா மற்றும் இந்தியாவின் ஒத்துழைப்புகளை பெற வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

வர்த்தக வாணிபம் மற்றும் கைத்தொழில்துறை அமைச்சு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“அந்நியச் செலாவணியை அதிகம் ஈட்டும் துறைகளில் கைத்தொழில்துறை பிரதானமானது. அரசு அதிகாரிகளின் முறையற்ற செயற்பாடுகளால், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்கள் பாதிப்புற்றுள்ளனர். நாட்டின் இன்றைய நிலையில் பொருளாதார ரீதியாக இவர்களுக்கு உதவ முடியாதுள்ளது. எனினும், பாரிய கைத்தொழிலாளர்கள் மற்றும் நிறுவனங்கள் அரசாங்கத்தின் அல்லது உயர் மட்ட அதிகாரிகளுடன் தொடர்பைப்பேணி உதவிகளைப் பெறுகின்றனர். உள்ளூரில் பத்து, ஐம்பது பேர்களுக்கு தொழில்வாய்ப்புக்களை வழங்கும் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களைப் பாதுகாக்க அமைச்சர் நளின் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் ஆகியோர் கவனம் செலுத்துங்கள்.

சர்வதேச அளவில் முக்கியம் பெறும் மன்னார் தீவு, வெளிநாட்டுக் கம்பனிகளால் ஆக்கிரமிக்கப்படுகிறதுறது. நமது நாட்டின் கடல், மணல் வளங்களைச் சூறையாடும் இக்கம்பனிகளின் செயற்பாடுகள் எல்லை கடந்துவிட்டன. இலஞ்சத்தையும் தரகுப்பணத்தையும் பெற்றுக்கொள்ளும் சில அரச அதிகாரிகளே, மண்வளத்தை அள்ளிச்செல்ல அனுமதிக்கின்றனர். போகிறபோக்கில், பொதுமக்களின் வீடுகளுக்குள் வந்தும் இக்கம்பனிகள் நில அகழ்வு செய்யும் போலுள்ளது. இவற்றை நிறுத்தி, புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழ் தொழில் வாண்மையாளர்களை நமது நாட்டின் கைத்தொழில்துறைகளில் முதலீடு செய்வதற்கு அழைக்க வேண்டும். நமது மண்வளமும் கடல் வளமுமே போதுமானது இந்நாட்டை மீட்க.

இவ்வளவு சிறப்புமிக்க நாட்டில் வாழும் எங்களை கடன்காரர்களாக ஆக்கிவிட்டனர் ராஜபக்ஷவினர். ஒருவருக்கு தலா 10 இலட்சம் ரூபாய் வீதம் கடனுள்ளது. இவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடுக்க முடியும். என்னையும் எனது குடும்பத்தையும் போலிக் காரணங்கள் சுமத்தி சிறையிலடைத்தனர். இவர்களுக்கு எதிராக மான நஷ்டஈடு வழக்குத் தொடுக்கவுள்ளேன்.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக்கு நூற்றுக் கணக்கான ஏக்கர் காணிகள் உள்ளன. இவற்றை புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் சகோதரர்களுக்கு விற்று அல்லது குத்தகைக்கு வாழங்கி கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தை கோருகிறேன். காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் இயந்திரங்கள், இரும்புகள் எல்லாம் களவாடப்பட்டு அத்தொழிற்சாலை கைவிடப்பட்டுக் கிடக்கிறது. அப்பிரதேச மண்ணை அகழ்ந்து எங்கோ கொண்டு செல்கின்றனர் வெளிநாட்டுக் கம்பனியினர். புல்மோட்டை இல்மனைற் தொழிற்சாலையில் சொந்த மாவட்ட மக்களுக்கு தொழில் வழங்கப்படவில்லை. வேறு பிரதேசத்தவருக்கே இங்கு வேலைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த தொழிற்சாலையால் புற்றுநோய் ஏற்படுவதாக இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, நிலைமைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுங்கள். நான் அமைச்சராக இருந்த காலத்தில் பிரதேசத்தவர்களுக்கே இங்கு தொழில் வழங்கினேன். ஆனாலும் வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு தொகை சிங்கள சகோதரர்களுக்கு தொழிலை வழங்கினேன். அதிக அந்நியச்செலாவணியை ஈட்டித்தரும் இந்த தொழிற்சாலை அமைந்துள்ள புல்மோட்டைக் கிராமத்தில், எந்த அபிவிருத்திகளும் செய்யப்படவில்லை. ஒரு வீதிகூட இங்கு அபிவிருத்தி செய்யப்படவில்லை” என்றார். (ஐ)



# ஜனாதிபதி ரணில் - பில்கேட்ஸ் டுபாயில் சந்தித்து உரையாடினர்

கொழும்பு, டிசெ. 04

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் தலைவரும் பிரபல வர்த்தகருமான பில்கேட்ஸ் நேற்று டுபாயில் சந்தித்துப் பேசினார்.

துபாயில் உள்ள எக்ஸ்போ சிற்றியில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டின் (COP 28) போதே இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பில்கேட்ஸ்க்கு இடையில் விசேட கலந்துரையாடலும் இடம்பெற்றுள்ளது. (ஐ)

# முத்துராஜவலையில் இயற்கை எரிவாயு மின்னுற்பத்தி நிலையம்

கொழும்பு, டிசெ. 04

நாட்டின் இரண்டாவது இயற்கை எரிவாயு மின் உற்பத்தி நிலையத்தை முத்துராஜவலையில் நிர்மாணிக்க திட்டமிட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, இதன் நிர்மாணப் பணிகளை அடுத்த வருடத்தில் ஆரம்பித்து, 2026ஆம் ஆண்டளவில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் 350 மெகா வோட்ஸ் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் இணைத்துக்கொள்ளப்பட வுள்ளது. இதன் நிர்மாணப் பணிகளுக்காக 75 கோடி ரூபாய் ஒதுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்காக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான முத்துராஜவலையில் 10 ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளது.

இந்த காணியை வழங்குவது தொடர்பான ஒப்பந்தம் அண்மையில் கைச்சாத்திடப்பட்டது. இந்தக் காணியை இலங்கை மின்சார சபைக்கு வழங்குவதன் மூலம் 72 கோடி ரூபாய் வருமானம் கிடைக்குமெனவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# கிழக்கு முனைய நிர்மாணம் அடுத்த ஆண்டுக்குள் நிறைவு

கொழும்பு, டிசெ. 04

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய நிர்மாணப் பணிகள் அடுத்த வருடத்தின் நடுப்பகுதியில் நிறைவடையும் என துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

கிழக்கு முனையத்தின் நிர்மாணப் பணிகள் தற்போது இடம்பெற்று வரும் நிலையில், அதில் 1,400 மீற்றர் நீளம் கொண்ட இறங்குதுறை நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

அதன் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த பிறகு, ஒரே நேரத்தில் 3 பாரிய கப்பல்களை நிறுத்த முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 5 நாட்களில் ரூ. 11 இலட்சத்துக்கு உணவருந்திய இராணுவத்தினர்!

கொழும்பு, டிசெ. 04

2022ஆம் ஆண்டில் பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரிக்கு வந்த இராணுவ தளபதிகள் குழுவின் உணவுக்காக ஐந்து நாட்களுக்கு கிட்டத்தட்ட 11 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது என தேசிய கணக் காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக செலவினங்களை கட்டுப்படுத்துவதற்காக திறைசேரி விடுத்துள்ள சுற்றறிக்கைக்கு முரணாக இந்தத் தொகை செலவிடப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கணக்காய்வு பணிமனையின் அறிக்கையின் படி, மேற்படி பணியாளர் கல்லூரியின் விவகாரங்களை ஆய்வு செய்ய வந்த பாதுகாப்பு செயலாளர், பாதுகாப்பு அதிகாரி மற்றும் முப்படை தளபதிகளுக்கே இவ்வாறு செலவு செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே, கல்லூரிக்கு 2019 முதல் 2022 வரை 13 கோடி ரூபாய்க்கு மேல் செலவில் கட்டப்பட்ட நான்கு அடுக்கு நூலகம் மற்றும் தேர்வு கூட கட்டடத்தில் தண் ணீர் கசிவு பிரச்னையை சரி செய்ய முடியவில்லை என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# சுற்றுலா பயணிகளின் வருகையால் நவம்பரில் ரூ. 175 கோடி வருமானம்!

கொழும்பு, டிசெ. 04

கடந்த நவம்பர் மாதம் சுற்றுலாப் பயணிகளின் வருகை காரணமாக 175 கோடி ரூபாய் வருமானமாக கிடைத்துள்ளது. மேலும், இந்த வருட இறுதிக்குள் மேலும் 3 இலட்சம் சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தருவார்கள் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் இலங்கைக்கு 12 இலட்சம் சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர் என்று அந்த அதிகாரசபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில், இந்த மாத இறுதிக்குள் நாட்டுக்கு 15 இலட்சம் சுற்றுலா பயணிகள் வருகை தருவார்கள் எதிர்ப் பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார். அத்துடன், கடந்த நவம்பர் மாதம் சுற்றுலாப் பயணிகளின் வருகை காரணமாக 175 கோடி ரூபாய் வருமானமாக கிடைக்கப்பெற்றுள்ளது - என்றும் கூறினார். (ஐ)

# பல்கலைக்கழக மாணவர் குழுவால் பாதுகாப்பு உத்தியோகத்தர் கடத்தல்!

கொழும்பு, டிசெ. 04

களனி பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்று பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை கடத்திச் சென்று தாக்கியதாக கிரிபத்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த ஏ. எஸ். தேவப்பிரிய (42) என்பவரே காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களனி பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு அதிகாரியாக கடமையாற்றும் இவர், நேற்று முன்தினம் காலை பல்கலைக் கழக மைதானத்தில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் உறங்கிக்கொண்டிருந்தார்.

அச்சமயம், அங்கு சென்ற மாணவர்கள் குழு ஒன்று அவரை எழுப்பி வெளியே அழைத்துச் சென்று மோட்டார் சைக்கிளில் வலுக்கட்டாயமாக ஏற்றி, பல்கலைக்கழகத்தின் உடல் நலமையத்துக்கு அழைத்துச் சென்று தாக்கினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் கிரிபத்கொடை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் அறிய வருகின்றது.

# அத்தியாவசிய பொருட்களின் விலை 2024இல் 72 வீதத்தால் உயர்வடையும்!

## பொருளாதார துறை பேராசிரியர்

**கொழும்பு, டிசெ. 04**

**2024 ஆம் ஆண்டு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பலவற்றின் விலை 72 சதவீதம் உயரும் என பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை பேராசிரியர் அமிந்த மெத்சிலா தெரிவித்துள்ளார்.**

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 2024ஆம் ஆண்டில் நாட்டில் பொருட்களின் விலை மற்றும் சேவைகளின் கட்டணங்கள் உள்ளிட்டவை கணிசமானளவில் அதிகரிக்கும். காரணம் மறைமுக வரிகள் மூலம் 72 சதவீதம் கூடுதல் வருவாயை அரசு எதிர்பார்ப்பதே ஆகும்.

அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்ட ஆவணத்தின்படி, ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 400 கோடி ரூபாய் (1224 பில்லியன்) கூடுதல் வருமானத்தை அரசு எதிர்பார்க்கிறது. இதில் 72 சதவீதம் வற் மற்றும் இதர கூடுதல் வரிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு வரி விதிக்கப்படும் போது, வணிகர்கள் வாடிக்கையாளரிடமிருந்து வரியை முழுமையாக வசூலிக்க முயற்சிப்பார்கள். இதன்படி, இந்த 72 சதவீத மறைமுக வரி நுகர்வோர் மீது செலுத்தப்படுவது தவிர்க்க முடியாதது.

அரிசி, மா, சர்க்கரை, பருப்பு, உருளைக்கிழங்கு, வெங்காயம் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை 72 சதவீதம் உயரும். பொது மக்களின் வாழ்க்கைத் தரம் குறைந்து பணவீக்கம் அதிகரிக்கும் - என்றும் அவர் கூறினார்.

(ஐ)

# மதுபானம் மூலமான வருமானம் 100 கோடி ரூபாயால் அதிகரித்தது

கொழும்பு, டிசெ. 04

மதுபான போத்தல்களில் ஒட்டப்பட்டுள்ள போலி ஸ்ரிக்கர்களை ஒழிக்க எடுத்த நடவடிக்கை மூலம் மதுவரித் திணைக்களத்தின் மாதாந்த வருமானம் 100 கோடி ரூபாயால் அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

தேசிய பொருளாதார மற்றும் பௌதிக திட்டமிடல் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதிக்கு வழங்கிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக மதுவரித் திணைக்களம், உள்நாட்டு இறைவரி திணைக்களம் மற்றும் இலங்கை சுங்க அதிகாரிகள், அந்த குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்டனர்.

மதுவரி சட்டத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதிகரித்துள்ள வருமானத்தை தக்கவைத்துக்கொள்ள வேண்டியதன் அவசியமும், எழுமாறான சோதனைகள் தொடர்வதும் மதுபான போத்தல்களில் போலி ஸ்ரிக்கர்களை ஒட்டுவதை மேலும் குறைக்கும் என குழு சுட்டிக்காட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ)

# வெப்ப வலய நாடுகள் பாதிக்கும் விடயங்களுக்காக ஒன்றுபடுவோம்!

## பிரேஸில் ஜனாதிபதியிடம் ரணில் கோரிக்கை



கொழும்பு, டிசெ. 04

வெப்ப வலய நாடுகளான இலங்கை மற்றும் பிரேசில் ஆகியவற்றை பாதிக்கக்கூடிய விடயங்களுக்குத் தீர்வு காண ஒன்றுபடுமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரேஸில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லுலாடா சில்வாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

டுபாயில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகளின் காலநிலை மாநாடான கோப்28க்கு இணையாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லுலாடா சில்வா ஆகியோருக்கு இடையிலான முக்கிய சந்திப்பு சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த சந்திப்பின்போதே ஜனாதிபதி இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அத்தோடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லுலாடா சில்வாவை இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

(ஐ)

## அமரகீர்த்தி எம். பி. கொலை வழக்கு:

# குற்றவாளிகளை அடையாயளம் காண புதிய தொழில்நுட்பம் அறிமுகமாகிறது!

கொழும்பு, டிசெ. 04

பொலநறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரின் மெய்ப்பாதுகாவலர் கொலைகள் தொடர்பான வழக்கு விசாரணையின் போது முதன்முறையாக முகத்தை அடையாளப்படுத்தும் தொழில்நுட்பத்தை நாட்டின் நீதி அமைப்பில் பயன்படுத்துவதற்கு சட்டமா அதிபர் ஏற்பாடு செய்துள்ளார்.

கடந்த ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி நிட்டம்புவவில் இருவரும் அடித்துக் கொல்லப்பட்டனர்.

ஆட்சியாளர்கள் மீதான மக்களின் கோபம் அதிகரித்ததையடுத்து ஏற்பட்ட மக்கள் எழுச்சியின் போது, முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த பின்னர் குண்டர்கள், காலி முகத்திடலில் போராட்டக்காரர்கள்மீது தாக்குதல் நடத்தினர்.

இதையடுத்து நாடு முழுவதும் கொந்தளிப்பு ஏற்பட்டது. இந்தநிலையில், "அலரி மாளிகையில் மகிந்த ராஜபக்ஷவின் கூட்டத்தில் பங்கேற்று விட்டு பொலநறுவைக்கு திரும்பிக் கொண்டிருந்த அமரகீர்த்தி அத்துக்கோரள எம். பி. பயணித்த வாகனம். நிட்டம்புவ நகரில் கோபமடைந்த பொதுமக்களிடம் சிக்கியதில், இந்த படுகொலை நிகழ்ந்தது.

இந்த கொலைகள் தொடர்பாக மூவரடங்கிய உயர் நீதிமன்ற ட்ரயல் அட் பார் முன்னிலையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள குற்றவாளிகளை அடையாளம் காண முகத்தை அடையாளம் காணும் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும்.

வெள்ளிக்கிழமை கம்பஹா மேல் நீதிமன்றில் வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட போது, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜானக பிரசன்ன பண்டார, வழக்கு விசாரணையின் போது சட்டமா அதிபர் திணைக்களம் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் என நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

இதன் மூலம், சம்பவத்தின் சி. சி. ரீ. வி. காட்சிகளை ஆய்வு செய்யவும், அந்தக் காட்சிகளில் காணப்பட்டவர்களின் முகங்கள் குற்றம் சாட்டப்பட்டவர்களுடன் ஒத்துப் போகின்றனவா என்பதைச் சரிபார்க்கவும், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் உண்மையில் குற்றத்தில் ஈடுபட்டார்களா என்பதை அடையாளம் காண முடியும் என்றும் அவர் கூறினார். குற்றத்திற்கு காரணமானவர்களை சாதகமாக கண்டறிந்து அவர்கள் தண்டிக்கப்படுவதை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும் என்றார்.

குற்றம் சாட்டப்பட்ட 41 பேர் மீது 14 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. குற்றம் சாட்டப்பட்டவர்களில் இருவர் இறந்துவிட்டனர். மேலும் இருவர் முன்னிலையாகாத நிலையில் விசாரிக்கப்படுகிறார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர் வெளிநாட்டில் இருப்பது தெரிந்ததே, மற்றையவர் இன்னும் கைது செய்யப்படவில்லை. இருப்பினும், குற்றம் சாட்டப்பட்ட இருவர் சார்பிலும் சட்டத்தரணிகள் வாதிடுகின்றனர்.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் சஹான் மாபா பண்டார (தலைவர்), ரஷ்மி சிங்கப்புலி மற்றும் ருவன் பத்திரன ஆகியோர் அடங்கிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வெள்ளிக்கிழமையன்று குற்றப்பத்திரிகைகள் வாசிக்கப்பட்ட பின்னர் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் குற்றமற்றவர்கள் என்று தெரிவித்தனர்.

(ஐ)

# பஸில், கோட்டாவின் குடியுரிமையை பறிப்பதற்கு ஆதரவு வழங்குவேன்!

## டிலான் பெரேரா எம். பி.

கொழும்பு, டிசெ. 04

பொருளாதார படுகொலையாளிகளை உயர்நீதிமன்றம் அடையாளப்படுத்தியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடியுரிமையை இரத்து செய்யும் கீழ்த்தரமான யோசனைக்கு ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டேன். ஏனெனில் அவர் நாட்டுக்கு சேவையாற்றியுள்ளார். பஸில், கோட்டாபய உட்பட ஏனையோரின் குடியுரிமையை நீக்கும் யோசனைக்கு இரு கைகள் அல்ல இரு கால்களையும் உயர்த்தி ஆதரவு வழங்குவேன் என்று சுதந்திர மக்கள் சபையின் டிலான் பெரேரா எம். பி. தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பொருளாதார படுகொலையாளிகள் யார் என்பதை உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது. இந்த தீர்ப்பு வரலாற்று சிறப்புமிக்கது. பொருளாதார ரீதியில் எடுத்த தவறான தீர்மானங்களினால் நாடு வங்குரோத்து நிலை அடைந்தது என்பதை நீதிமன்றம் ஏற்றுள்ளது.

இந்த தீர்ப்பைக் கொண்டு ஒரு தரப்பினர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடியுரிமையை இரத்து செய்யும் யோசனையை கொண்டு வந்தால் அதற்கு ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டேன். அந்த கீழ்த்தரமான செயலுக்கு துணை செல்லமாட்டேன்,ஏனெனில் மகிந்த ராஜபக்ஷ இந்த நாட்டுக்கு சேவை செய்துள்ளார்.

நான் அவர் பக்கம் இனி செல்ல போவதில்லை. அவருக்கும் எனக்கும் தற்போது எவ்வித தொடர்பும் இல்லை. ஆனால், அவர் மீதான மதிப்பு இன்றும் உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இன்றைய நிலைக்கு நாங்கள் யாரும் பொறுப்பல்ல. அவரது குடும்ப உறுப்பினர்களே அவரை இந்த நிலைக்கு தள்ளியுள்ளார்கள்.

பொருளாதார படுகொலையாளர்கள் என அறிவிக்கப்பட்டுள்ள பஸில் ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ உட்பட ஏனைய தரப்பினரது குடியுரிமையை பறிக்கும் யோசனை கொண்டு வந்தால் அதற்கு இரு கைகள் அல்ல இரு கால்களையும் உயர்த்தி ஆதரவு வழங்குவேன் - என்றார்.

(ஐ)

# மயிலத்தமடுவில் தமிழரின் கால்நடைகள் கொல்லப்படும் சம்பவங்கள் அதிகரிப்பு!

மட்டக்களப்பு, டிசெ. 04

**மட்டக்களப்பு - மயிலத்தமடுவில் பண்ணையாளர்களின் கால்நடைகளை தாக்கிக் காயத்துக்கு உள்ளாக்கும் - கொல்லப்படும் சம்பவங்கள் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**



நேற்று முன்தினமும் மாடு ஒன்று வெட்டப்பட்டு கொல்லப்பட்டதாக பண்ணையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் இத்தகைய செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுமாயின் மயிலத்தமடு பண்ணையாளர்கள் உயிரை மாய்த்துக்கொள்வதை தவிர வேறு தீர்வு இல்லை எனவும் அவர் கூறினார்.

இதனிடையே, இது தொடர்பில் மட்டக்களப்பில் உள்ள இராஜாங்க அமைச்சர் பாராமுகமாக செயல்படுகிறார் என்றும் ரணில் விக்ரமசிங்க எங்களுக்கு வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றவேண்டும் எனவும் கால்நடை பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தொடர்ச்சியாக கால்நடைகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களால் பேரிழப்புகளை எதிர்கொள்வதாகவும் தாம் வாழ்வாதாரத்தை இழந்து வருவதாகவும் பண்ணையாளர்கள் கவலை தெரிவித்தனர். (ஐ)

# கிழக்கு மாகாணத்தில் 712 மாணவர்களுக்கு 9 ஏ

மட்டக்களப்பு, டிசெ. 04

அண்மையில் வெளியானா க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் 712 மாணவர்கள் 9 பாடங்களிலும் அதிசிறப்பு சித்தியான ஏ பெறுபேறை பெற்றுள்ளனர்.

2022ஆம் ஆண்டு நடந்த சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இந்தப் பரீட்சைக்கு கிழக்கு மாகாணத்தில் 26 ஆயிரத்து 874 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

இதில், மட்டக்களப்பு கல்வி வலயத்தில் 136 மாணவர்களும், கல்முனை கல்வி வலயத்தில், 122 மாணவர்களும், மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்தில் 112 மாணவர்கள் உள்ளடங்கலாக 712 மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ சித்தி அடைந்துள்ளனர்.

மேலும் கிழக்கு மாகாணத்தில் 373 மாணவர்கள் சகல பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர். இதில் கிண்ணியா கல்வி வலயத்தில் 54 மாணவர்களும் திருகோணமலை கல்வி வலயத்தில் 50 மாணவர்களும், மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்தில் 38 மாணவர்களும், கந்தளாய் கல்வி வலயத்தில் 38 மாணவர்களும், கல்முனை கல்வி வலயத்தில் 25 மாணவர்களும் சகல பாடங்களிலும் சித்தியடைய தவறியுள்ளனர். (ஐ)



# பாரம்பரிய உணவுகளின் கண்காட்சி, செயன்முறை!

மட்டக்களப்பு, டிசெ. 04

பாரம்பரிய உணவுகளின் கண்காட்சியும் செயன்முறையும் மட்டக்களப்பு வாழைச்சேனை விவசாய போதனாசிரியர் பிரிவில் நடைபெற்றது.

விவசாய போதனாசிரியர் ச.சிறீகண்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.பேரின்பராஜா, கோறளைப் பற்று பிரதேச செயலாக உதவித்திட்டப் பணிப்பாளர் கங்காதரன், உதவி விவசாயப் பணிப்பாளர் க. அருந்தசாசன், வேர்ள்ட்விஷன் உத்தியோகத்தர் யேசுதாசன் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

மக்களிடையே அருகி வரும் பாரம்பரிய உணவு பழக்கத்தினை செயல் முறைப்படுத்தும் விதமான விளக்க உரைகள், உணவுகளை தயாரித்து காட்டல் மற்றும் பல்வேறு வகையான பாரம்பரிய உணவுகளை காட்சிப்படுத்தல் போன்றன இடம்பெற்றன. (ஐ)

# நன்னடத்தை பாடசாலை மாணவன் மர்ம மரணம்!

## மேற்பார்வையாளரான பெண் கைது

அம்பாறை, டிசெ. 04

சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் 15 வயது சிறுவன் மர்மமான முறையில் உயிரிழந்தமையை அடுத்து அவரின் மேற்பார்வையாளரான பெண் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை - கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இஸ்லாமபாத் பகுதியிலுள்ள பெண்கள், சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் கடந்த மாதம் 17ஆம் திகதி மணியொன்றை திருடிய குற்றச்சாட்டில் உயிரிழந்த சிறுவன் கொக்குவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் குறித்த சிறுவன் காப்பகத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தார். இந்தநிலையில் குறித்த சிறுவன் மர்மமான முறையில் கடந்த புதன்கிழமை அதிகாலை உயிரிழந்தார்.

உயிரிழந்த சிறுவனின் உடலில் காயத் தழும்புகள் காணப்பட்டதையடுத்து சிறுவனின் பெற்றோர் அவரின் மரணத்தில் சந்தேகம் தெரிவித்தனர்.

இதையடுத்து, பொலிஸ் முறைப்பாடு அளிக்கப்பட்டது. சிறுவனின் சடலம் அம்பாறை பொது மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையின் படி சிறுவன் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட காயங்களாலேயே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, இச்சம்பவம் தொடர்பில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலில் பல்வேறு குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எம்.எல் றபீக் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பாடசாலைக்கு சென்று தொடர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போதே சிறுவனை தாக்கினார் என்ற சந்தேகத்தில் 25 வயது மதிக்கத்தக்க அப்பாடசாலையில் கடமையாற்றும் மேற்பார்வையாளரான பெண் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைதான சந்தேக நபர் சனிக்கிழமை இரவு கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார். (ஐ)

# கிழக்கிலங்கையின் இலக்கிய செல்நெறி குறித்து ஆய்வரங்கு

அக்கரைப்பற்று, டிசெ. 04

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் மொழித்துறையுடன் இனணந்து நடாத்திய "இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பின்னரான கிழக்கிலங்கையின் இலக்கிய செல்நெறி" என்ற ஆய்வரங்கு சனிக்கிழமை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தலைமையில் தென்கிழக்குப் பல்கலைகழக "மொழித்துறை" அரங்கில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்திலுள்ள மூத்த கவிஞர்கள், எழுத்தாளர்கள் என பலரும் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைகழக கலை கலாசார பீடாதிபதி பேராசிரியர் எம். எம். பாஸீல் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.



வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வரங்கில் மொழி பெயர்ப்புத் துறையின் செல்நெறி தொடர்பில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் ஏ. எவ். எம். அஸ்ரப் ஆய்வுரை நிகழ்த்தியதுடன் சிறுகதைத் துறையின் செல்நெறி தொடர்பில் அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலக உதவிக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி ஹனிபா இஸ்மாயிலும், பெண் எழுத்துக்களின் செல்நெறி தொடர்பில் கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் கற்கைகள்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ம.நதிராவும், இலக்கியத்தில் நவீன தொழில்நுட்பத்தின் செல்வாக்கு தொடர்பில் கணிமையாளர் மு.மயூரனும், ஆய்வு பகிர்வின் நோக்கு சம்பந்தமாக யப்பான் கக்சுயின் பல்கலைக்கழக ஓய்வுநிலை ஆய்வுப் பேராசிரியர் கலாநிதி. மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் கருத்துப் பகிர்ந்தனர். (ஐ)



# கல்முனை மாணவர்களின் சாரணர் பயிற்சி முகாம்!

கல்முனை, டிசெ. 04

கல்முனை கல்வி வலயத்தின் கீழ் உள்ள கல்முனை அல்- மிஸ்பாஹ் மகா வித்தியாலய மாணவர்களுக்கு ஒரு நாள் சாரணர் பயிற்சி முகாம் பாடசாலையின் பிரதி அதிபர் எம். ஆர். எம். நௌஸாத் அவர்களின் வழிகாட்டலில் சனிக்கிழமை நடைபெற்றது.

பாடசாலையின் சாரணர் குழு ஆசிரியர்களும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களுமான எம்.ஜே. எம். முபீத் மற்றும் ஏ.ஜே.எம்.சாபித் ஆகியோரின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்த பயிற்சி முகாமிற்கு பிரதம வளவாளர்களாக மேஜர் கே. எம்.தமிம் உதவி மாவட்ட சாரணர் ஆணையாளர் ஐ. எல்.எம். இப்றாஹிம், உதவி மாவட்ட சாரணர் ஆணையாளர் (தொழிநுட்பம்) எம்.ஏ. சலாம் ஆகியோரும் கலந்து கொண்டனர் .

குறித்த சாரணர் பயிற்சி முகாமை கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் யூ. எல். றியாழ், பாடசாலையின் அதிபர் எம். ஐ. அப்துல் ரஸாக் ஆகியோர் பார்வையிட்டதுடன் மாணவர்களுக்கு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கினர். (ஐ)

ஈழநாடு



# இந்தியாவில் 4 மாநில தேர்தல்: பாரதிய ஜனதா 3இல் வெற்றி!

## தெலுங்கானவில் காங்கிரஸ் ஆட்சி அமைக்கும்

புதுடில்லி, டிசெ. 04

**இந்தியாவின் மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், தெலுங்கானா என நான்கு மாநிலங்களுக்கு நடந்த தேர்தலில் மூன்று மாநிலங்களில் மத்தியை ஆளும் பாரதிய ஜனதா கட்சியும் (பா. ஜ. க) ஒன்றில் எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சியும் வெற்றிபெற்றுள்ளன.**



மத்தியப் பிரதேசம்

மத்தியப் பிரதேச மாநிலத்தில் மொத்தம் உள்ள 230 தொகுதிகள் உள்ளன. ஆட்சியை பிடிக்க 116 தொகுதிகளை கைப்பற்ற வேண்டும். பா. ஜ. கட்சியின் ஆட்சி நடந்து வந்த இந்த மாநிலத்தில் 163 இடங்களை ஆளும் கட்சியான பா. ஜ. க. வென்றுள்ளது. காங்கிரஸ் கட்சி 64 இடங்களில் வெற்றி பெற்றது.

தெலுங்கானா

தெலங்கானா மாநிலத்தில் உள்ள 119 தொகுதிகள் உள்ளன. ஆட்சியைப் பிடிக்க 60 இடங்களைப் பெற வேண்டும். அங்கு 3ஆவது முறையாக சந்திரசேகர ராவ் ஆட்சியை கைப்பற்று வாரா என்ற எதிர்பார்ப்பு நிலவிய நிலையில் காங்கிரஸ் கட்சி வென்றுள்ளது. அங்கு காங்கிரஸ் 65 இடங்களை கைப்பற்றி ஆட்சியை பிடித்தது. சந்திரசேகர ராவ் தலைமையிலான பாரதிய ராஷ்டிர சமிதி கட்சி 41, பா. ஜ. க. 8 இடங்களை வென்றுள்ளன.

ராஜஸ்தான்:

ராஜஸ்தானில் மொத்தம் 200 சட்டப்பேரவை தொகுதிகள் உள்ளன. ஆட்சியை பிடிக்க 101 இடங்கள் தேவை. காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருந்த இந்த மாநிலத்தில் பா. ஜ. க. 109 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. காங்கிரஸ் 74 இடங்களைப் பெற்றுள்ளது.

சத்தீஸ்கர்:

சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள 90 சட்டப்பேரவை தொகுதிகள் உள்ளன. பெரும்பான்மைக்கு 46 இடங்களில் வெற்றி தேவை. இதில், பா. ஜ. க. 53 இடங்களையும் காங்கிரஸ் 34 இடங்களையும் பிடித்தன. (ஐ)

# பாரிஸில் கத்திக்குத்து; ஜேர்மனியர் உயிரிழப்பு



பாரிஸ், டிசெ. 04

பாரிஸில் நேற்று முன்தினம் இரவு ஈரானை பூர்வீகமாகக் கொண்ட நபர் ஒருவர் கத்தி, சுத்தியல் மூலம் உல்லாச பயணிகள் மீது நடத்திய தாக்குதலில் ஜேர்மனி பிரஜை ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்துள்ளனர்.

பாரிஸ் நகரின் தெற்கு பகுதியில் - பெருமளவில் உல்லாசப் பயணிகள் திரள்கின்ற ஈபிள் கோபுரம் அருகேயுள்ள மெட்ரோ ரயில் நிலைய பகுதியில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

"அல்லாஹூ அக்பர்" எனக் கோஷமிட்டவாறு தாக்குதல் நடத்திய அந்த ஆபத்தான நபரைப் பொலிஸார் கைதுசெய்திருக்கின்றனர். அவர் பாரிஸ் புறநகராகிய நியூலி-சூ- செய்னை சேர்ந்தவர் எனக் கூறப்படுகிறது.

உயிரிழந்த ஜேர்மனியப் பிரஜைக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ளது. அவர் அதிர்ச்சியால் ஏற்பட்ட மாரடைப்புக் காரணமாகவே மரணமானார் என்பது தெரிய வந்துள்ளது. அவரது மனைவியும் அதிர்ச்சி காரணமாக மயக்கமுற்ற நிலையில் சிகிச்சையில் சேர்க்கப்பட்டுள்ளார். பிரெஞ்சுப் பிரஜை ஒருவரும் மற்றொரு வெளிநாட்டுக் குடிமகனுமே காயமடைந்த ஏனைய இருவருமாவர்.

தாக்குதலாளி சிறிது நேரத்தில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். அவர் ஈரானைப் பூர்வீகமாகக் கொண்ட குடும்பத்தில் 1997 இல் பிறந்த பிரெஞ்சு பிரஜை என்று கூறப்படுகிறது. உளவு சேவைகளால் ஏற்கனவே ஆபத்தான நபர்களைப் பட்டியலிடுகின்ற எஸ் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தவர். தீவிர மனோநிலைக் குழப்பங்கள் மற்றும் குற்றச் செயல்களுக்காக அறியப்பட்ட அவர் 2016 இல் சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலையானவர் என்றும் தகவல் வெளியாகி உள்ளது. (ஐ)



# முதல் உளவு செயற்கை கோளை விண்ணில் ஏவியது தென்கொரியா!

சியோல், டிசெ. 04

வடகொரியா சமீபத்தில் தனது முதல் இராணுவ உளவு செயற்கைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.

இந்த செயற்கைக்கோள் அதன் பணிகளை தொடர்ந்து செய்து வரும் நிலையில், தென் கொரியாவில் தயாரிக்கப்பட்ட முதல் உளவு செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது.

எலான் மஸ்க்கின் 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனத்தின் 'பால்கன்-9' ஏவூர்தி மூலம் தென் கொரியாவின் உளவு செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட்டது. அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள வாண்டன்பர்க் விண்வெளி படைத்தளத்தில் இருந்து இந்த செயற்கைக் கோள் ஏவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஹமாஸ் தலைவர்களை தேடி அழிப்பதற்கு இஸ்ரேல் திட்டம்!

புதுடில்லி, டிசெ. 04

பலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு எதிரான போர் முடிந்த பிறகு, இஸ்ரேல் முன்னாள் பிரதமர் கோல்டா மீரின் வழியைப் பின்பற்ற இப்போதைய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு விரும்புகிறார் என்று கூறப்படுகிறது. இதன்படி, இஸ்ரேல் எதிரிகள் (ஹமாஸ் தலைவர்கள்) எந்த நாட்டில், எந்த கண்டத்தில் இருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து கொலை செய்யும் திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கவும் திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது.

குறிப்பாக துருக்கி, லெபனான் மற்றும் கத்தாரில் உள்ள ஹமாஸ் தலைவர்களை ஒழிப்பதற்கான திட்டத்தை இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட் வகுத்துவருவதாகக் கூறப்படுகிறது. ஆனால், இந்த திட்டம் மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்று மொசாட் அமைப்பின் முன்னாள் இயக்குநர் இப்ரெய்ம் ஹலெவி கவலை தெரிவித்துள்ளார்.

மொசாட் உளவு அமைப்பு தயாரித்துள்ள பட்டியலில், இஸ்மாயில் ஹனியே, முகம்மது டெய்பி, யாயா சின்வார் மற்றும் காலித் மஷால் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இதில் இஸ்மாயில் ஹனியே பலஸ்தீன முன்னாள் பிரதமர் (2006)ஆவார். இவர் ஹமாஸ் அரசியல் குழு தலைவராக 2017இல் தேர்வானார். இப்போது தாமாக முன்வந்து வெளிநாடுகளில் (கட்டார், துருக்கி) வசிக்கிறார்.

முகம்மது டெய்ப் என்பவர் ஹமாஸ் இராணுவ பிரிவு தலைவர். இவர்தான் இஸ்ரேலின் முதல் எதிரி. இவரை கொலை செய்ய இஸ்ரேல் 6 முறை முயற்சி செய்துள்ளது. இவர் அமெரிக்காவின் சர்வதேச தீவிரவாதிகள் பட்டியலிலும் இடம்பெற்றுள்ளார். இவர் எங்கு இருக்கிறார் என்பது தெரியவில்லை.

யாயா சின்வார் இஸ்டைன் அல்-காசம் பிரிகேட்ஸ் (ஹமாஸ் இராணுவம்) முன்னாள் தளபதி ஆவார். இவர் 2017இல் காஸாவில் உள்ள ஹமாஸ் அமைப்பின் தலைவரானார். 23 ஆண்டுகள் இஸ்ரேல் சிறையில் இருந்த இவர், கைதிகள் பரிமாற்ற திட்டத்தின் கீழ் 2011 இல் வெளியில் வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 240 பொதுமக்கள் காஸாவில் மரணம்!

காஸா, டிசெ. 04

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் நிறுத்த காலம் நிறைவடைந்த நிலையில் காஸா முனையில் இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை தொடங்கியது. போர் விமானங்கள் மூலம் காஸா முனையில் உள்ள ஹமாஸ் ஆயுதக்குழுவினரின் நிலை களை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில், கான் யூனிஸ் நகரில் இஸ்ரேலிய போர் விமானங்களின் முழு வீச்சில் தாக்குதலில் இதுவரை 240 பேர் பலியாகினர் என்று ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

நூற்றுக்கணக்கானோர் படுகாயம் அடைந்துள்ளனர் என்று கூறப்படுகிறது. போர் தொடங்கியதில் இருந்து இதுவரை காஸாவில் பலியானவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்தை கடந்துள்ளது. இதில் 70 சதவீதத்துக்கும் அதிகமானோர் பெண்கள் மற்றும் சிறுவர்கள் என்றும் காஸா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையின்படி, காஸாவில் சுமார் 17 இலட்சம் மக்கள் (சுமார் 80 சதவீத மக்கள்) எட்டு வார போரால் இடம்பெயர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கத்தோலிக்க பாடசாலையில் குண்டுவெடிப்பில் நால்வர் பலி!

மணிலா, டிசெ. 04

கிளர்ச்சியால் பாதிக்கப்பட்ட தெற்கு பிலிப்பைன்ஸில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கத்தோலிக்க பாடசாலையின் உடற்பயிற்சி கூடத்தில் நடந்த குண்டு வெடிப்பில் 4 பேர் கொல்லப்பட்டனர். குறைந்தது 50 பேர் காயமடைந்தனர்.

2017 இல் ஐந்து மாதங்களுக்கு இஸ்லாமிய போராளிகளால் முற்றுகையிடப்பட்ட நாட்டின் மிகப்பெரிய முஸ்லிம் நகரமான மராவியில் குண்டு வெடிப்பு ஏற்பட்டது.



பயங்கரவாத தாக்குதலுக்கு கவர்னர் மமிந்தல் அடியோங் ஜூனியர் கண்டனம் தெரிவித்துள்ளார். (ஐ)

# உற்பத்தியாகும் பிளாஸ்ரிக்கில் 4 வீதமே மீள்சுழற்சியாகின்றது

கொழும்பு, டிசெ. 04

**நாளொன்றுக்கு 938 மெற்றிக் தொன் அளவிலான பிளாஸ்ரிக் பொருட்கள் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற போதிலும் அவற்றில் 4 சதவீதம் மாத்திரமே மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படுகின்றது என்று தெரியவந்துள்ளது.**

**சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழுவில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

உற்பத்தி செய்யப்படும் பிளாஸ்ரிக்கில் 32 சதவீதம் மட்டுமே மீள சேகரிக்கப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக்கில் 4 சதவீதம் மட்டுமே இயந்திர ரீதியாக மறுசுழற்சி செய்யப்படுகின்றன அந்தக் குழு வெளிப்படுத்தியுள்ளது. மீதி பிளாஸ்ரிக் பொருட்கள் வசூலிக்கப்பட்டாலும், முறைசாரா முறையில் அப்புறப்படுத்தப்படுவதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தொழில்துறையினருக்கு எந்தவித விதிமுறைகளும் இன்றி இரண்டாம் நிலை பிளாஸ்ரிக்கை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் தொழில்துறையின் தேவைக்கேற்ப உரிமங்களை வழங்குமாறும் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு துறைசார் மேற்பார்வைக் குழு அறிவுறுத்தியுள்ளது.

நாட்டுக்கு வருடாந்தம் 4 இலட்சம் மெட்ரிக் தொன் பிளாஸ்ரிக் மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கும், 20 ஆயிரம் மெற்றிக் தொன் சிறு கழிவு பிளாஸ்ரிக் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

எவ்வாறினும், கடந்த வருடம், நாட்டின் தொழிற்சாலைகளுக்கு 5 ஆயிரத்து 179 மெற்றிக் தொன் கழிவு பிளாஸ்ரிக் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. எனவே, தொழில் துறையின் தேவையை கருத்தில் கொண்டு, அதற்கேற்ப அனுமதி வழங்கவும், குறிப்பிட்ட 5 ஆண்டுகளுக்குள் கொண்டு வரப்படும் பிளாஸ்ரிக்கை சேகரிக்கும் கட்டமைப்பை ஏற்படுத்தவும், அதிகாரிகளுக்கு சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

அதிக செலவு காரணமாக பிளாஸ்ரிக் மீள்சுழற்சிக்காக சேகரிப்பதில் பலர் ஆர்வம் காட்டுவதில்லை என அதிகாரிகள், குறித்த குழுவிடம் தெரிவித்தனர். எனினும், பிளாஸ்ரிக் சேகரிப்புக்கான ஊக்கத்தொகையை அதிகரிப்பதன் மூலம் இந்தத் தொகையை அதிகரிக்க முடியும் என சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார். (ஐ)

# மன்னாரைச் சேர்ந்த இரு குடும்பங்கள் தனுஷ்கோடியில் அகதிகளாக தஞ்சம்!

சென்னை, டிசெ. 04

மன்னார், சாந்திபுரம் பகுதியை வசிப்பிடமாக கொண்ட இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 7 பேர் படகு மூலம் கடந்த வெள்ளிக்கிழமை தனுஷ்கோடிக்கு அடுத்துள்ள மூன்றாம் மணல் திட்டில் சென்று இறங்கியுள்ளனர்.

தகவல் அறிந்த இராமேஸ்வரம் கடலோர பொலிஸார், அவர்களை மீட்டு, முதற்கட்ட விசாரணைக்குப் பின்னர், மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைத்தனர்.

விசாரணையின்போது அவர்கள், இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாகவே தாம் படகு மூலம் தனுஷ்கோடிக்கு வந்ததாகவும் படகு கட்டணமாக இரண்டு குடும்பங்களும் சேர்ந்து ஒரு இலட்சம் ரூபாய் வழங்கியதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், பொருளாதார நெருக்கடி காரணமாக இது வரை 295 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தனுஷ்கோடிக்கு வந்து மண்டபம் அகதிகள் முகாமில் தஞ்சமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. (அ)

# கிரிக்கெட் சபை மீதான தடை அடுத்த வாரத்தில் நீக்கப்படும்?

கொழும்பு, டிசெ. 04

எதிர்வரும் வாரத்தில் இலங்கை கிரிக்கெட் சபை மீதான தடை முற்றாக நீக்கப்படும் என்று விளையாட்டுத்துறை அமைச்சின் உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக மேலும் அறிய வருவதாவது,

புதிய விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தடையை நீக்குவதற்கு சர்வதேச கிரிக்கெட் சபையுடன் நேரடியாக கலந்துரையாடியதாகவும் அதற்கமைவாக மேற்படி சபையில் இருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையுடன் கலந்துரையாடிய விடயம் தொடர்பாக இலங்கை கிரிக்கெட் சபையுடனும் அமைச்சர் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றார்.

இதேவேளை, எதிர்வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் நிறைவேற்று சபையின் கூட்டத்துக்கு புதிய விளையாட்டுத் துறை அமைச்சருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நாட்டில் மீன் நுகர்வு 15 வீதத்தால் வீழ்ச்சி!

கொழும்பு, டிசெ. 04

கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு தொடர்பாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள வருடாந்த கணக்காய்வு அறிக்கையின் படி, கடந்த ஆண்டில் (2022) இலங்கையில் தனிநபர் மீன் நுகர்வு நாளொன்றுக்கு 31.3 கிராமாக 15 வீதத்தால் குறைந்துள்ளது.

2021ஆம் ஆண்டில், இலங்கையின் தனிநபர் மீன் நுகர்வு ஒரு நாளைக்கு 36.7 கிராம் என அடையாளம் காணப்பட்டது. கடந்த ஆண்டு (2022) இலங்கையின் மொத்த மீன் உற்பத்தி 2021 ஆம் ஆண்டை விட 30 ஆயிரத்து 35 மெற்றிக் தொன்களால் குறைந்துள்ளது.

2021 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த மீன் உற்பத்தி 3 இலட்சத்து 21 ஆயிரத்து 575 மெற்றிக் தொன்களாகவும், 2022 ஆம் ஆண்டில் மீன் உற்பத்தி 2 இலட்சத்து 90 ஆயிரத்து 640 மெற்றிக் தொன்களாகவும் குறைந்துள்ளதாக கணக்காய்வு அறிக்கை மேலும் தெரிவிக்கிறது. (ஐ)

# மரண தண்டனை கைதிகளாக ஏழு வெளிநாட்டுப் பிரஜைகள்!

## நீதி அமைச்சர் தகவல்

கொழும்பு, டிசெ. 04

நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் 1206 மரண தண்டனை கைதிகள் உள்ளார்கள். இவர்களில் 744 பேருக்கான மரண தண்டனை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 454 பேர் மேன்முறையீடு செய்துள்ளார்கள். 07 வெளிநாட்டுப் பிரஜைகள் மரண தண்டனை கைதிகளாக உள்ளனர் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை நடைபெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் 1206 மரண தண்டனை கைதிகள் உள்ளார்கள். இவர்களில் 744 பேருக்கான மரண தண்டனை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 454 பேர் மேன்முறையீடு செய்துள்ளார்கள். 07 வெளிநாட்டு பிரஜைகள் மரண தண்டனை கைதிகளாக உள்ளனர்.

சிறைச்சாலைகளில் 346 ஆயுள் தண்டனை கைதிகள் உள்ளனர். இவர்களில் 100 பேர் மேன்முறையீடு செய்துள்ளார்கள்.

அத்துடன் சிறைச்சாலைகளில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 10784 கைதிகளில் 61.3 சதவீதமானோர் போதைப் பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள்.-என்றார். (அ)

# 1084 பேர் புனர்வாழ்வு பெற்று வருகின்றனர்

கொழும்பு, டிசெ. 04

"புனர்வாழ்வளித்தல் தொடர்பான சட்டம் அண்மையில் இயற்றப்பட்டுள்ளது. கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் 520 பேரும், சேனபுர மத்திய நிலையத்தில் 471 பேரும், வவுனியா மத்திய நிலையத்தில் 93 பேரும் சிகிச்சை பெற்று வருகிறார்கள்" என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை (02) நடைபெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (ஐ)

# 24 மணிநேரம் இயங்கும் 13 தபால் நிலையங்கள்

இலங்கை அஞ்சல் திணைக்களம்
Department of Posts - Sri Lanka

கொழும்பு, டிசெ. 04

மேல் மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 13 தபால் நிலையங்கள் 24 மணிநேரமும் திறந்து வைக்கப்பட்டுள்ளன என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பொரளை, வெள்ளவத்தை, ஹெவ்லொக் ரவுன், தெஹிவளை, மொறட்டுவை, பாணந்துறை, களுத்துறை, கொட்டாஞ்சேனை, கொம்பனித்தெரு, பத்தரமுல்லை, கல்கிசை, நுகேகொடை மற்றும் சீதாவகபுர தபால் நிலையங்கள் 24 மணி நேரமும் திறந்திருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

அந்த தபால் நிலையங்கள் ஊடாக பொலிஸாரால் வழங்கப்படும் தண்டப் பணத்தை செலுத்த முடியும் என பொலிஸ் ஊடக பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (ஐ)

# மூன்று எம்.பிக்களுக்கு ஒரு மாத கால தடை!

கொழும்பு, டிசெ. 04

பாராளுமன்ற உறுப்பினர்களான டயனா கமகே, சுஜித் சஞ்சய் பெரேரா மற்றும் ரோஹண பண்டார ஆகியோர் பாராளுமன்றத்துக்குள் ஒரு மாத காலத்துக்கு பிரவேசிக்க தடை விதிக்கும் வகையில் முன்வைக்கப்பட்ட யோசனை 56 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபையின் நடவடிக்கைகள் ஆரம்பமானபோது, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த வால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதன்போது கருத்து தெரிவித்ததையடுத்து சபையில் அமைதியின்மை ஏற்பட்டிருந்தது.

குறித்த யோசனைக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து அந்த யோசனை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது பெரும்பாலான எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேறியிருந்தனர். இந்நிலையில் குறித்த யோசனைக்கு ஆதரவாக 57 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் மாத்திரம் இந்த யோசனைக்கு எதிராக வாக்களித்துள்ளார். (அ)

## வட்டுக்கோட்டை...

மரணமான இளைஞருக்கு நீதி வேண்டும் என்று வலியுறுத்தியதுடன், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சட்ட விரோத சித்திரவதைகளை நிறுத்துமாறும் வலியுறுத்தப்பட்டது.

குற்றச் சம்பவம் ஒன்றில் சந்தேகநபராக வட்டுக்கோட்டை பொலிஸாரால் நாகராசா அலெக்ஸ் கைது செய்யப்பட்டார். தடுப்பில் சித்ரவதைகளுக்குள்ளான அவர் கடந்த நவம்பர் 19ஆம் திகதி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரூ.8000...

சேனாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த விசேட மாநாட்டிலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

கடன் பெற்ற தொழிலதிபர்கள் வெளிநாடுகளில் அதிக தொழில் செய்து அரசியல் பாதுகாப்பை பெற்று சம்பாதித்த பணத்தை அந்தந்த நாடுகளில் வங்கிகளில் வைப்பு செய்துள்ளனர். இந் நிலையில், அவர்கள் இலங்கை வங்கிக்கு 5 ஆயிரம் கோடி ரூபாயையும் மக்கள் வங்கிக்கு 3 ஆயிரம் கோடி ரூபாயையும் இவர்கள் வழங்க வேண்டியுள்ளது - என்றும் தெரிவித்தார். (ஐ)

## அமெரிக்க...

அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் வடக்கு - கிழக்கில் அமைதியான நினைவுகூரல் களின் போது தமிழர்கள் கைதுசெய்யப் பட்டமை குறித்து ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளதாக அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ராஜா கிருஸ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த கைதுகள் தமிழர்களின் நினைவரல்களை தடுக்க முயலும் இலங்கை பொலிஸாரின் வரலாற்றின் தொடர்ச்சியே என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## இலங்கை...

சார்பில் நீதிமன் றத்தில் விரிவான முறைப்பாடு தாக்கல் செய்யப்பட வேண்டும் எனவும் தற் போது அது தொடர்பான நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதா கவும் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வழக்கில் கப்பல் நிறுவனம் பூர்வாங்க ஆட்சேபனைகளை சமர்ப்பித்ததை அடுத்து நீதிமன்றம் உரிய அனுமதியை வழங்கியதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எக்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பரவல் மற்றும் இலங்கை கடற்பரப்பில் அந்த கப்பல் மூழ்கியதால் இலங்கையின் கடல் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட சேதத் துக்கான இழப்பீட்டை மீட்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 15ஆயிரம்...

26 அதிகாரிகளும் மற்றும் விமானப் படையின் 15 அதிகாரிகளும் அடங்குகின்றனர்.

முப்படைகளிலிருந்து வெளியேறி தலைமறைவானவர்களை கைது செய்வதற்கு பொது மன்னிப்பு காலம் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், தற்போது வரையில் தலைமறைவானவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஒப்பந்த கொலையாளிகளாக பாதாள உலக தலைவர்கள் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் பயன்படுத்தப் படுகின்றனர் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (ஐ)

# முட்டையின் விலை குறைவடையும்

கொழும்பு, டிசெ. 04

நத்தார் பண்டிகை காலத்தில் முட்டைகளின் விலை 40 முதல் 43 ரூபாயாக குறைவடையும் என்று தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைக்கு மத்தியில் முட்டையின் விலையும் கடந்த சில மாதங்களாக அதிகரித்து காணப்பட்டன.

இந்நிலையில் எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு முட்டையின் விலை சற்று குறைவடைந்துள்ளது.

அந்தவகையில், முட்டையை 40 ரூபா முதல் 43 ரூபாவுக்கு மக்கள் கொள்வனவு செய்ய முடியுமென விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை முட்டையின் விலை குறைவடைந்தமைக்கு உள்ளூர் முட்டை உற்பத்தி அதிகரித்தமையே காரணம் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்தார்.

அத்துடன் எதிர்வரும் ஜனவரி முதல் இந்தியாவில் இருந்து முட்டை இறக்குமதி செய்வதை நிறுத்துவதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வட்டு...

வேண்டும் என சட்டத்தரணி கள் அனுமதி கோரிய நிலையில் நீதிவான் அதற்கு அனுமதி வழங்கினார்.

இந்த வழக்கு இன்றைய தினம் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. இதன் போது சாட்சியங்கள் பதிவு செய்யப்படவுள்ளன. இதையடுத்து, நாளை அடையாள அணிவகுப்பு நடைபெறவுள்ளது.

குற்றச் சம்பவம் ஒன்றில் சந்தேக நபராக வட்டுக்கோட்டை பொலிஸாரால் நாகராசா அலெக்ஸ் கைது செய்யப்பட்டார். தடுப்பில் சித்ரவதைகளுக்குள்ளான அவர் கடந்த நவம்பர் 19ஆம் திகதி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் 4 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது (ஐ)

## ரணிலுக்கு...

அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்கால திட்டமிடல் அற்ற வரவு - செலவு திட்டமே முன்வைக்கப்பட்டுள்ளது. ஜனவரி முதல் மேலும் சில வரிகளை அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகவுள்ளது. அவை வரவு - செலவு திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. ஒருபுறம் அரச உத்தியோகத்தர்களுக்கான வாழ்வாதாரக் கொடுப்பனவை வழங்குவதாகக் கூறிக் கொண்டு, மறுபுறம் வற் வரியை 18 சதவீதமாக அதிகரித்துள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உலகம் சுற்றிக் கொண்டிருக்கும் போது, நாட்டில் நாளுக்கு நாள் பிரச்னைகள் அதிகரித்து செல்கின்றன.

அரசமைப்பு பேரவை சார் செயல்பாடுகளில் சபாநாயகர் பக்க சார்பாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். பாராளுமன்றத்திற்கூட நியாயம் நிலைநாட்டப்படாத போது, நாட்டில் எவ்வாறு மக்களுக்கு நியாயம் வழங்கப்படும்? ஜனாதிபதியும், ஜனாதிபதியின் சகாக்களும் பாராளுமன்றத்தையோ சட்டத்துறையையோ மதிப்பதில்லை. விக்கிரமசிங்க - ராஜபக்ஷ ஆட்சி மக்கள் மத்தியில் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியுள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தலும் பொதுத் தேர்தலும் நடைபெறும் என்று ஜனாதிபதி அறிவிக்கின்றார். ஜனாதிபதி பதவிக்கு அப்பால் தேர்தல் ஆணையாளராகவும் அவர் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார். தேர்தல் தொடர்பில் அறிவிக்கும் உரிமை ஜனாதிபதிக்கு கிடையாது - என்றார்.

# வட மாகாண பேரவை செயலக செயலாளராக சிறீ நியமனம்!

வடமராட்சி, டிசெ. 04

வடக்கு மாகாண பேரவை செயலகத்தின் செயலாளராக ஆழ்வார்பிள்ளை சிறீ நியமனம் பெற்றுள்ளார்.

பருத்தித்துறை பிரதேச செயலாளராக பணியாற்றிய அவர் பதவி உயர்வு பெற்று புதிய பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நாளை மறுதினம் புதன்கிழமை பதவியை பொறுப்பேற்பார்.

ஆழ்வார்பிள்ளை சிறீ நல்லூர், தெல்லிப்பழை பிரதேச செயலகங்களின் செயலாளராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

# மீனவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 04

மன்னார் முதல் காங்கேசன்துறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஊடான கடற்கரைக்கு அப்பால் உள்ள கடற்பரப்புக்களில் 48 மணி நேரத்துக்கு பயணிக்க வேண்டாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் மீனவர்களுக்கு நேற்று காலை அறிவித்தல் விடுத்தது.

பலத்த காற்று மற்றும் கடல் சீற்றம் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு அறிவிப்பு விடுத்துள்ளது.

இந்த அறிவிப்பு நேற்று காலை முதல் அடுத்த 24 மணி நேரத்துக்கு அமுலில் இருக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் தென்மேற்கு வங்கக் கடலின் ஆழம் மற்றும் ஆழம் குறைந்த கடல் பகுதிகளில் பயணிக்கும் மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடல் பரப்புக்கு அண்டிய ஆழமான காற்றழுத்த தாழ்வு நிலை, இன்று 11.4 பாகை வடக்கு அகலாங்கு மற்றும் 82.5 பாகை கிழக்கு நெடுங்கோட்டுக்கு அருகில் யாழ்ப்பாணத்திலிருந்து வடகிழக்கே சுமார் 325 கிலோ மீற்றர் தொலைவில் சூறாவளியாக உருவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 48 மணித்தியாலங்களுக்கு மன்னார் முதல் காங்கேசன் துறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஊடான கடற்கரைக்கு அப்பால் உள்ள கடற்பரப்புக்களில் பயணிக்க வேண்டாம் என மீனவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சட்டவிரோத மின்வேலியில் சிக்கி இரு யானைகள் உயிரிழந்தன!

புத்தளம், டிசெ. 04

புத்தளம் கருவலகஸ்வவை தேவனுவர பகுதியில் சட்டவிரோத மின்சார வேலியில் சிக்கிய நிலையில் இரண்டு கொம்பன் யானைகளின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டன வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இந்த கொம்பன் யானைகள் இரண்டும் நபரொருவரின் காணியிலேயே உயிரிழந்தன என்று திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

'வாசல' என்று அழைக்கப் படுகின்ற கொம்பன் யானை நேற்று உயிரிழந்ததாகவும் "வலகம்பா" என்று அழைக்கப்படுகின்ற மற்றைய கொம்பன் யானை ஒரு வாரத் துக்கு முன்பே உயிரிழந்ததாகவும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

காணி உரிமையாளர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளது டன், கருவலகஸ்வெவ பொலிஸார் மற்றும் கருவலகஸ்வெவ வனஜீவ ராசிகள் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## வெப்ப வலய...

பிரேசிலில் கோப்30இல் முன்வைக்க பரிந்துரைப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

உலக வெப்பமயமாதலின் சவாலை எதிர்கொள்ளுதல் மற்றும் வெப்ப வலய நாடுகளுக்கு நிலைபேறான அபிவிருத்தியை உறுதிசெய்வதை இலக்காகக் கொண்ட எதிர்காலத் திட்டமான வெப்ப வலயக் காலநிலை அபிலாஷைகள் தொடர்பான திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோப்28 மாநாட்டில் முன்வைத்து உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

காலநிலை நிதியங்களில் மாதிரி அடிப்படையிலான மாற்றம் மற்றும் பயனுள்ள பிரதிபலன்களை அடைவதற்கு பல தரப்பு அணுகுமுறையின் தேவை ஆகியவை இந்தத் திட்டத்தை விரைவுபடுத்துவதற்கு வழிவகுத்தன.

2030ஆம் ஆண்டுக்குள் புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்தும் இலக்கை அடைவதற்கான நிச்சயமற்ற தன்மைகள் குறித்து கவனம் செலுத்தப்படவேண்டும்.

இந்த தீர்மானமிக்க இலக்கை அடைவதற்கான 50 வீத வாய்ப்பு காணப்படுகிறது. அதற்காக ஏனைய நாடுகளிடம் இருந்து நிதி உதவி கிடைப்பதை எதிர்பார்க்க முடியாது. எனவே, இந்த நிதியைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் வெப்பவலய மற்றும் வெப்பவலயமற்ற நாடுகளுக்கும் அரச மற்றும் தனியார் துறைக்கும் இடையிலான ஒத்துழைப்பை அபிவிருத்தி செய்யவேண்டியது அவசியமாகும்.

வெப்பவலய காலநிலை அபிலாஷைகள் திட்டம், காடுகள், சதுப்பு நிலங்கள் போன்ற அத்தியாவசிய இயற்கை வளங்களை மையமாகக் கொண்ட முதலீடுகளை ஈர்ப்பதே வெப்ப வலய காலநிலை அபிலாஷைகள் திட்டத்தின் நோக்கமாகும். உலக வெப்பமயமாதலை எதிர்ப்பதற்கு இந்த முதலீடுகள் அவசியமாகும்.

இதன் மூலம் காலநிலை மாற்றத்துக்கு எதிராக வருடாந்தம் செலவிடப்படும் டிரில்லியன் கணக்கான டொலர்களை மீதப்படுத்த முடியும். இதற்காக தனியார் துறையின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கான சாத்தியம் காணப்படுகிறது. நீலப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் நிலைபேறான இந்து சமுத்திரத்தை உருவாக்குவதற்கும் இந்து சமுத்திர ரிம் சங்கத்துடன் இணைந்து பணியாற்றுவது முக்கியத்துவமுடையதாகும்.

வெப்பவலயக் காலநிலை அபிலாசைகள் திட்டம் மற்றும் நிலைபேறான இந்து சமுத்திரத்துக்கான முயற்சிகள் உலகின் மிகப் பெரிய காபன் உறிஞ்சு தலை உருவாக்கும். மாலைதீவு, கென்யா, பிரேசில் ஆகிய நாடுகளின் ஜனாதிபதிகள் மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் உள்ளிட்ட உலகத் தலைவர்களுடனான கலந்துரையாடலின்போது, இந்த வேலைத்திட்டத்தில் அவர்கள் அதிக ஆர்வம் காட்டினர்.

வெப்பவலயக் காலநிலை அபிலாசைகளுக்கான திட்டத்தை ஆராய்ந்து அறிக்கையிட ஒரு நிபுணர் குழுவை நியமிக்க முன்மொழிகின்றேன். மேலும் அக்குழுவின் ஆய்வுகளை பிரேசிலில் கோப்30இல் முன்வைக்கவும் பரிந்துரைக்கின்றேன் - என்றார்.

ஈழநாடு
Eelanadu

# இணக்கப்பாட்டின் அடிப்படையில் தமிழரசு கட்சிக்கு புதிய தலைமை!

## முயற்சி எடுக்கிறோம் என்கிறார் மாவை

யாழ்ப்பாணம், டிசெ. 04

**இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைமையை இணக்கப்பாட்டின் அடிப்படையில் தெரிவு செய்வதற்கு முயற்சிகளை எடுத்துவருவதாக அந்தக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.**



இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள நிலையில், அக்கட்சியின் தலைமைத்துவப் பதவிக்கு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன் மற்றும் சிவ ஞானம் சிறீதரன் ஆகியோர் விண்ணப்பங்களைச் செய்துள்ளனர்.

ஆரம்பத்திலிருந்தே புதிய தலைமைக்கான தெரிவானது வாக்கெடுப்பின்றி நடைபெறவேண்டும். அதுவே கடந்த காலங்களில் சம்பிரதாயமாக இருந்து வருகின்றது என்ற நிலைப்பாட்டில் இருக்கும் மாவை. சோ. சேனாதிராஜா தற்போது தலைமைக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தமிழரசுக் கட்சிக்கான புதிய தலைமையானது எதிர்வரும் மாதம் நடைபெறுவதற்கு திட்டமிட்டுள்ள பொதுச்சபையின் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளது. இதற்காக எமது கட்சியின் இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் விண்ணப்பங்களை செயலாளரிடத்தில் அனுப்பி வைத்துள்ளனர்.

என்னைப் பொறுத்தவரையில், எனது அரசியல் வாழ்க்கையில் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கான போட்டிகள் காணப்பட்டாலும் எப்போதும் வாக்கெடுப்பு வரையில் சென்றதில்லை. அவ்விதமான நிலைமைகள் சில வேளைகளில் கட்சியை கூறுபோடுவதற்கு வழிவகுக்கும் நிலைமைகள் ஏற்படும் ஆபத்துக்கள் உள்ளன.

ஆகவே, தலைமைப்பதவிக்கான தெரிவின்போது, வாக்கெடுப்பின்றி சுமுகமான அடிப்படையில் தெரிவினை நிறைவு செய்வதை நோக்காகக் கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளேன்.

விசேடமாக, தலைமைப் பதவிக்கு போட்டியிடுகின்ற வேட்பாளர்களிடையே இணக்கப்பாடுகளை ஏற்படுத்துவதன் ஊடாக புதிய தலைமையை தெரிவு செய்யும் அதேநேரம் அந்த தலைமையின் கீழ் கட்சி மேலும் வலுவாக தமிழ் மக்களின் இன விடுதலைப் போராட்டத்தில் காத்திரமான பணிகளை எதிர்காலத்தில் முன்னெடுக்கும் என்பதே நோக்கமாக உள்ளது - என்றார். (ஐ)

# ஆணைக்குழுக்களின் சுயாதீனம் ஜனாதிபதியால் கேள்விக்குறி!

## ஜி. எல். பீரிஸ் விசனம்



கொழும்பு, டிசெ. 04

நாட்டில் தற்போது சுயாதீன ஆணைக்குழுக்கள் உள்ளனவா என்பது சந்தேகமாக உள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியிடம் நிதியமைச்சு உள்ளதால் ஆணைக்குழுக்களின் சுயாதீனத் தன்மை கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. நிறைவேற்றுத் துறையால் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளதால் மக்களாணை மலினப்படுத்தப்பட்டுள்ளது என சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும், பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சனியன்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நீதிமன்ற கட்டமைப்பையும் சட்டங்களையும் மறுசீரமைப்பதற்கு நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சிறந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற வகையில் நாங்கள் ஒத்துழைப்பு வழங்குவோம்.

சட்டத்துறை,நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறை ஆகிய முத்துறைகளுக்கான அதிகாரம் அரசமைப்பால் வேறுப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு துறையின் அதிகாரத்தில் பிறிதொரு தலையிடக்கூடாது என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தின் அதிகாரத்தையும் கோட்பாடுகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு சபாநாயகருக்கு உண்டு என முன்னாள் சபாநாயகர் அநுர பண்டார பல முறை அழுத்தமாக வெளிப்படுத்தியுள்ளார். ஆனால், தற்போது அவ்வாறான தன்மை காணப்படுகிறது? என்பது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகள் ஆற்றும் உரைக்கு சட்ட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்,உயர் நீதிமன்ற நீதியரசர்கள், பிரதம நீதியரசர்கள் மற்றும் நீதியரசர்கள் ஆகியோரை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் மக்கள் பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்க கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, சட்டவாக்கத்துறையும் நீதித்துறையும் எந்நிலையிலும் இணக்கமாக செயல்பட வேண்டும்.

நாட்டில் தற்போது சுயாதீன ஆணைக்குழுக்கள் உள்ளதா என்பது சந்தேகமாக உள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியிடம் நிதியமைச்சு உள்ளதால் ஆணைக்குழுக்களின் சுயாதீனத் தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நிறைவேற்றுத்துறையின் செயல்பாடுகளால் பிற்போடப்பட்டுள்ளது. இது ஜனநாயகத்துக்கு முற்றிலும் விரோதமானது.

அரசமைப்பு பேரவையை புறக்கணித்து ஜனாதிபதி செயல்படுகிறார். அரசியலமைப்பு பேரவையின் செயல்பாடுகளை ஆராய்வதற்கு விசேட தெரிவு குழு அமைப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டமை முற்றிலும் தவறானது. ஜனாதிபதியின் எண்ணங்களை செயல்படுத்த முடியாது .அவரும் வரையறைகளுக்குட்பட்டு செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

# சுதந்திர மக்கள் பேரவையில் இரண்டு அணிகள் உருவாகின?

கொழும்பு, டிசெ. 04

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு அளிப்பது என்பது தொடர்பில் டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் பேரவையில் பிளவு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க வேண்டும் என்று அந்தக் குழுவின் ஒரு சிலரால் கொண்டுவரப்பட்ட பிரேரணையை பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் நிராகரித்தனர். இதையடுத்தே இந்தப் பிளவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால், சுதந்திர மக்கள் பேரவையில் இரு அணிகள் தோற்றம் பெற்றுள்ளன என்று கூறப்படுகின்றது. (ஐ)

# இனப் பிரச்னைக்கு நாமே தீர்வு காண வேண்டும்!

## அதாவுல்லா எம். பி. சொல்கிறார்



கொழும்பு, டிசெ. 04

இனப் பிரச்னை உட்பட ஒவ்வொரு விடயத்திலும் எங்கள் பிரச்னைக்கான தீர்வை காண வேண்டுமே தவிர, வெளிநாடுகள் அழுத்தம் தரும் தீர்வை செய்யக்கூடாது இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

சனிக்கிழமை பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில் நீண்ட காலமாக இனப்பிரச்னை இருக்கிறது. உலகத்தில் பல நாடுகளில் பல மொழிகளை பேசுகிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால், பெரிய பிரச்னைகளை நாங்கள் காணவில்லை. இந்தியாவில் பல மொழிகள் இருக்கின்றன. பல இனங்கள் இருக்கின்றன. பிள்ளை சமூகங்கள் இருக்கின்றன. ஆனால், பிரச்னைகள் இல்லை. இலங்கையில் 2 மொழிகளே இருக்கின்றன. 2 இனங்களே இருக்கின்றன. இனப்பிரச்னை மட்டும் இந்நாட்டில் தீரவில்லை. பல அழிவுகளை இந்நாடு எதிர்கொண்டு இருக்கிறது.

வெளிநாட்டவரின் தலையீடு காரணமாக இனப்பிரச்னை அதிகரித்துக்கொண்டு போகிறது. ஆனால், பிரச்னையை இலகுவாக தீர்க்க முடியும் என்பது எமக்கு எல்லோருக்கும் தெரியும். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின் இலங்கையை 9 மாகாணமாக பிரித்து ஒரு பகிடியாக அதை பார்த்து கொண்டு இருக்கிறோம். இந்த தீர்வுகளால் மக்கள் எந்த விதமான பயனும் அடையவில்லை.

இந்த நாட்டில் வாழும் மக்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு மத சுதந்திரம் உண்டு. வாழுவதற்கான உரிமையும் உண்டு. இடப்பிரச்னையை தீர்த்தால் இனப்பிரச்னையை 90 வீதம் தீர்க்க முடியும். ஒவ்வொரு விடயத்திலும் எங்களது பிரச்னைக்கான தீர்வை காண வேண்டுமே தவிர வெளிநாடுகள் அழுத்தம் கொடுக்கின்ற தீர்வை செய்ய கூடாது - என்றார். (ஐ)

# பணத்துக்காக மூதாட்டி கொலை; 18 வயது மாணவன் கைதானார்!

கொழும்பு, டிசெ. 04

83 வயதான மூதாட்டியை அடித்துக் கொலை செய்து, தொண்டு பணிகளுக்காக அவர் சேகரித்து வைத்திருந்த பணத்தை கொள்ளையடித்த 18 வயதான உடற் கட்டழகனான மாணவன் ஒருவனை கல்கிசை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உடற் கட்டழகுக்காக விற்றமின் மாத்திரைகள் வாங்குவதற்காகவே அந்தப் பணத்தை கொள்ளையடித்ததாக கைதான மாணவன் தெரிவித்துள்ளார்.

மொறட்டுவ பிரதேசத்தில் தனியாக வசித்து வந்த 83 வயதுடைய திருமணமாகாத திலகா நளினி பெர்னாண்டோ என்ற பெண்ணே படுகொலை செய்யப்பட்டார்.

பக்கத்து வீட்டில் வசிக்கும் சந்தேக நபர் சர்வதேச பாடசாலை ஒன்றில் கல்வி பயின்ற இங்கிலாந்து பிரஜை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, மூதாட்டியை தாக்க பயன்படுத்திய கத்தி, அவரிடம் இருந்து திருடப்பட்ட ஸ்மார்ட் கைபேசி, கொலையின் போது சந்தேக நபர் அணிந்திருந்த ரீ-சேர்ட் மற்றும் கால்சட்டை என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள மிஸ்டர் சிறீ லங்கா ஜூனியர் உடற்கட்டமைப்பு போட்டியில் பங்குபற்றுவதற்கு தயாராகியிருந்தார் என்று பொலிஸார் கூறினார்.

கடந்த நவம்பர் 29 ஆம் திகதி இந்த கொலைச் சம்பவம் நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# காலநிலை மாற்றம்: நமக்கு அவகாசம் இருக்கிறதா?

நாராயணி சுப்ரமணியன்

ஐ.நா. அவையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பானது பசுங்குடில் வாயுக்களின்உமிழ்வு பற்றிய ஒரு விரிவான அறிக்கையை நவம்பர் 20 அன்று வெளியிட்டுள்ளது. உமிழ்வுகளைக் குறைப்பது பற்றி நாடுகள் தந்த உறுதிமொழிக்கும், நடைமுறையில் வெளியிடப்படும் உமிழ்வுகளின் அளவுக்கும் இருக்கும் இடைவெளியை ஆராயும் இந்த அறிக்கையை, ‘உமிழ்வு இடைவெளி அறிக்கை’ (Emissions Gap Report) என்று பொதுவாகக் குறிப்பிடுவார்கள்.

இந்த ஆண்டுக்கான அறிக்கைக்கு ‘Broken Records’ என்று தலைப்பிடப்பட்டுள்ளது. தலைப்பை இரண்டு விதங்களில் நாம் புரிந்துகொள்ளலாம். முந்தைய சாதனைகளை - உச்சவரம்புகளை முறியடிக்கும் வண்ணம் அதிக வெப்பநிலைகள் எட்டப்பட்டுள்ளன என்பது ஒரு பொருள். இந்தத் தலைப்பை உருவகமாகவும் அணுகலாம். “உமிழ்வுகள் - காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பான செயல்பாடுகள் மிகவும் மந்தநிலையில் இருக்கின்றன. இந்தப் போக்கை உலகம் மாற்றிக்கொள்ளாவிட்டால், ஒவ்வொரு வருடமும் கீறல் விழுந்த இசைத்தட்டைப் போல நாங்களும் இதையே திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியிருக்கும்” என்று அறிக்கையை வெளியிட்ட சுற்றுச்சூழல் அமைப்பினர் விளக்கம் அளித்திருக்கிறார்கள்.

### உச்சவரம்பும் நிலவரமும்

உமிழ்வுகள் - காலநிலை பற்றிய பல தரவுகள் அறிக்கையில் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் மிகவும் முக்கியமானது உலகளாவிய சராசரி வெப்பநிலை பற்றிய எதிர்காலக் கணிப்பு. தொழிற்புரட்சிக்கு முந்தைய காலத்துடன் ஒப்பிடும்போது, உலகளாவிய சராசரி வெப்பநிலை மிக அதிகமாக உயர்ந்துவிடக் கூடாது என்பதே காலநிலைச் செயல்பாடுகளின் முதன்மை இலக்கு. 2015இல் பாரிஸில் நடைபெற்ற காலநிலை உச்சி மாநாட்டில், உலகளாவிய சராசரி வெப்பநிலை அதிகரிப்பு 1.5 டிகிரி செல்சியஸுக்கு மேல் போகாமல் இருக்க முயற்சிகள் எடுப்போம் என்று உலக நாடுகளிடையே ஒரு ஒப்பந்தம் போடப்பட்டது இது ‘பாரிஸ் ஒப்பந்தம்’ என்று அழைக்கப்படுகிறது. சராசரி வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியஸைத் தாண்டி அதிகரித்தால் மிகக் கடுமையான விளைவுகள் ஏற்படும் என்பதால், அந்த உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதையொட்டியே ஒவ்வொரு காலநிலை உச்சி மாநாட்டிலும் முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

ஆனால், இப்போது வெளிவந்திருக்கும் உமிழ்வு சார்ந்த அறிக்கையில், தற்போதைய செயல்பாடுகளை உலக நாடுகள் அப்படியே தொடரும் பட்சத்தில், இந்த நூற்றாண்டுக்குள் சராசரி வெப்பநிலை அதிகரிப்பு இரண்டு டிகிரி செல்சியஸைத் தொட்டுவிடும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, உச்ச வரம்பையும் மீறி அரை டிகிரி செல்சியஸ் அளவுக்கு வெப்பநிலை உயரும் என்பது தெரியவந்திருக்கிறது. 2023இல் இதுவரை 86 நாட்களில், உலகின் சராசரி வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியஸ் உயர்ந்திருக்கிறது. வருடாந்திர சராசரி வெப்பநிலை உயர்வுதான் கணக்கில் கொள்ளப்படும் என்றாலும், ஓர் ஆண்டில் கிட்டத்தட்ட கால்வாசி நாட்களில் உச்சவரம்பு தாண்டப்பட்டிருக்கிறது என்பது நிச்சயமாக ஒரு எச்சரிக்கைதான். “நாம் உச்சவரம்பை நெருங்கிக்கொண்டிருக்கிறோம் என்பதையே இது காட்டுகிறது” என்கிறார்கள் காலநிலை ஆராய்ச்சி யாளர்கள். அதிலும் குறிப்பாக செப்டம்பர் மாதத்தின் சில நாட்களில், உலகளாவிய சராசரி வெப்பநிலை 1.8 டிகிரி செல்சியஸ் அதிகரித்திருப்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.



### உமிழ்வுகள் நிறைந்த பாதை

2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது உலகளாவிய பசுங்குடில் வாயுக்களின் உமிழ்வு 1.2 வீதம் அதிகரித்திருக்கிறது. இவற்றில் மூன்றில் ஒருபங்கு உமிழ்வுகள், புதை படிவ எரிபொருள்களின் பயன்பாட்டால் ஏற்படுகின்றன. ஐ.நா. பொதுச் செயலாளர் அண்டோனியோ குட்டர்ஸ், ‘காலநிலை மாற்றத்தின் நச்சு வேர்’ என்று புதைபடிவ எரிபொருள்களை வர்ணிக்கிறார். ஒவ்வோர் ஆண்டும் புதைபடிவ எரிபொருள்களின் பயன்பாடும் அவற்றிலிருந்து வெளிவரும் பசுங்குடில் வாயுக்களின் உமிழ்வும் அதிகரித்தபடியே இருக்கின்றன. கொரோனா கொள்ளை நோய் காலகட்டத்தில், உலகளாவிய உமிழ்வுகளின் அளவு வெகுவாகக் குறைந்தது. உலகம் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிய பின்னரும், இதே நிலை தொடர வேண்டும் என்று காலநிலைச் செயல்பாட்டாளர்கள் கோரிக்கை வைத்தார்கள். ஆனால், தற்போதைய தரவுகளைப் பார்க்கும் போது, கொரோனாவுக்கு முந்தைய காலகட்டத்தின் உமிழ்வுகளை நாம் மீண்டும் எட்டிவிட்டோம் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஒரு சிறிய இடைவெளிக்குப் பிறகு உலகம் வழக்கமான, உமிழ்வு நிறைந்த பாதைக்குத் திரும்பிவிட்டது.





உமிழ்வுகளில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளையும் இந்த அறிக்கை விரிவாகப் பேசுகிறது. உலகிலேயே அதிக வருமானம் கொண்ட 10 வீத மக்கள், உலகளாவிய உமிழ்வுகளில் கிட்டத்தட்ட 48 வீதத்திற்கு காரணமாக இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் வளர்ச்சியடைந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள். இவர்களது உமிழ்வுகளால் ஏற்படும் பாதிப்புகள், வறியவர்களையும் மூன்றாம் உலக நாடுகளையுமே அதிகமாகத்தாக்கும் என்பதைத் தனியாகச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இந்தச் ‘சூழலியல் அநீதி’யைக் காலநிலை மாற்றத்தின் மிக மோசமான பின்விளைவு என்றே சொல்ல வேண்டும்.

### உறுதிமொழியும் நிதர்சனமும்

பாரிஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட 97 நாடுகள், நிகர பூஜ்ய உமிழ்வுகளை நோக்கிச் செயல்படுவதாக உறுதியளித்திருக்கின்றன. அதாவது, வெளியிடப்படும் பசுங்குடில் வாயுக்களுக்குச் சமமான அளவில் வளிமண்டலத்தில் இருக்கும் பசுங்குடில் வாயுக்கள் நீக்கப்படும்போது மட்டுமே நிகர உமிழ்வு பூஜ்யமாக இருக்கும். இதை நடத்திக்காட்டுவதாகப் பல நாடுகள் உறுதிமொழி அளித்திருந்தாலும் அது இன்னும் சரியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. இன்னும் வேதனையான ஒரு தகவல் என்னவென்றால், ஒரு வேளை இந்த 97 நாடுகளும் நிகர பூஜ்ய உமிழ்வுக்கு வந்தால்கூட, உலகளாவிய சராசரி வெப்பநிலை 2 டிகிரி செல்சியஸ் உயர்வதற்குச் சாத்தியம் இருக்கிறது என்பதுதான். காலநிலை மாற்றம் ஒரு நேர்க்கோட்டில் இயங்கவில்லை, ஒவ்வொரு கூடுதல் டன் பசுங்குடில் வாயுவுக்கும் மாற்றத்தின் விகிதம் அதிகரிக்கிறது என்ற முக்கியமான அறிவியல் கோட்பாட்டுக்கு இந்தக் கணிப்பு ஒரு சான்று.

2018 நிலவரப்படி, உலகில் இயங்கிவரும் ஒட்டுமொத்த நிலக்கரிச் சுரங்கங்கள், எண்ணெய்க் கிணறுகள் ஆகியவற்றின் உற்பத்தியை இந்த அறிக்கை ஆராய்ந்திருக்கிறது. இவற்றில் இருந்து வெளிவரப் போகும் நிலக்கரி, எண்ணெய், எரிவாயுவை நாம் முழுமையாகப் பயன்படுத்தினால், நிச்சயமாக 1.5 டிகிரி செல்சியஸ் அதிகரிப்பை எட்டிவிடுவோம் என்றும், இவற்றின் தொடர் பயன்பாட்டின்போது 2 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கவும் சாத்தியம் இருக்கிறது என்றும் கண்டறிந்திருக்கிறார்கள்.

### மனிதகுலத்தின் எதிர்காலம்:

2022இல் இதுவரைஇல்லாத அளவுக்கு 57.4 கிகா டன் (giga tonne) உமிழ்வுகளை உலகம் வெளியிட்டிருக்கிறது. உலகெங்கும் நிலக்கரிச் சுரங்கங்களும் எண்ணெய்க்கிணறுகளும் புதிதாகத் திறக்கப்பட்டபடியே இருக்கின்றன. புதைபடிவ எரிபொருள்களால் இயங்கும் தற்போதைய தொழிற்சாலைகளைப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வகைமைக்குள் கொண்டு வருவதற்குத் தீவிரமான முயற்சிகள் அவ்வளவாக எடுக்கப்படவில்லை. மாறாக, வெளியிடப்பட்ட உமிழ்வுகளைத் திரும்பப்பெறுவதற்கு உதவும் கரிமச் சந்தையானது லாபம் கொழிக்கும் ஒரு தொழிலாக மாறியுள்ளது, பசுமைக் கண்துடைப்பும் அதிகரித்திருக்கிறது.

“உலக நாடுகள் பல இலக்குகளை நிர்ணயித்திருக்கின்றன. ஆனால், அவற்றிடம் இருக்கும் தற்போதைய சட்டங்கள் - கொள்கைகளை வைத்துக்கொண்டு இந்த இலக்குகளை எட்ட முடியாது” என்று இந்த அறிக்கை தெள்ளத்தெளிவாகத் தரவுகளுடன் உறுதிப்படுத்துகிறது. இனிவரும் ஆண்டுகளில், ஒவ்வோர் ஆண்டும் 4 வீத உமிழ்வுகளைக் குறைத்தால் மட்டுமே, உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பை 2 டிகிரி செல்சியஸுக்குள் கட்டுப்படுத்த முடியும் என்று இந்த அறிக்கை பரிந்து ரைக்கிறது. காலநிலை பற்றிய முக்கிய முடிவுகளுக்கான தளமான காலநிலை உச்சி மாநாடு 28 (UN Conference of Parties 28 - COP 28), நவம்பர் 30 முதல் டிசம்பர் 12 வரை ஐக்கிய அரபு அமீரகத் தில் நடைபெறுகிறது. மாநாட்டுக்கான ஒரு வழிகாட்டியாகவும் இந்த அறிக்கை விளங்குகிறது. அறிக்கையில் இருக்கும் எச்சரிக்கைகளை மனதில் கொண்டு, பரிந் துரைகளை ஏற்று, உலக நாடுகள் செயல் படுத்துமா என்பதில் தான் மனித இனத் தின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது!

●

# இலங்கை பொருளாதாரம் வீழ்வதற்கு ராஜபக்ஷக்களே காரணம்:

# நீதிமன்றம் தீர்ப்பளித்தும் ஏன் நடவடிக்கை இல்லை?

**யூ.எல். மப்றூக்**

இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சர்களான மஹிந்த மற்றும் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட 7 பேர் மேற்கொண்ட தவறான பொருளாதார மேலாண்மைத் தீர்மானங்களே காரணம் என இலங்கை உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது.

அதைத்தொடர்ந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால் அவர்கள் மேல் ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை?

**ராஜபக்ஷ குழுவுக்கு எதிரான வழக்கு**



2020-ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், பொருளாதார ரீதியாகக் கடுமையாக வீழ்ச்சியடைந்த இலங்கை, ஒரு கட்டத்தில் திவால் ஆன நாடாக அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பி.பி. ஜயசுந்தர, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல மற்றும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் பேராசியர் டப்ளியு.டி. லக்ஷ்மன் ஆகியோரின் தவறான பொருளாதார தீர்மானங்களால் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக ஆணையிடுமாறு கோரி, உச்ச நீதிமன்றில் 2022-ஆம் ஆண்டு இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இவற்றில் ஒரு மனுவை இலங்கை வணிக சபையின் முன்னாள் தலைவர் சந்ரா ஜயரத்ன, நீச்சல் வீரர் ஜூலியன் போலிங், ஜெகான் கனகரட்ன மற்றும் ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஆகிய தரப்பினர் தாக்கல் செய்திருந்தனர்.

மற்றைய மனுவை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி அதுலசிறி குமார சமரகோன், சூசையப்பு நேவிஸ் மொராயஸ் மற்றும் கலாநிதி மாஹிம் மென்டிஸ் ஆகியோர் தாக்கல் செய்திருந்தார்கள்.

நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் பிரதிவாதிகள் எடுத்த தவறான முடிவுகளால், நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக ஆணையிடுமாறு மேற்படி மனுக்களிலும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரி, புவனேக அலுவிகார, விஜித் மலல்கொட, மூர்து பெனாண்டோ மற்றும் பிரியந்த ஜயவர்த்தன ஆகிய நீதியரசர்கள் முன்னிலையில் இது குறித்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில், நவம்பர் 14-ஆம் தேதி தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. நீதியரசர்களில் பிரியந்த ஜயவர்த்தன தவிர்ந்த ஏனைய மூன்று நீதியரசர்களும் பிரதிவாதிகளின் தீர்மானங்களால் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அறிவித்து தீர்ப்பு வழங்கினர்.

குறித்த வழக்கில் மனுதாரர்கள் நஷ்ட ஈடு கோரவில்லை என்பதனால், அது குறித்து தீர்ப்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மேலும் தவறான தீர்மானத்தை எடுத்தவர்களுக்கான அபராதம் குறித்தும் தீர்ப்பில் குறிப்பிடப்படவில்லை.


இந்த நிலையில், மனுதாரர்களுக்கு தலா 150,000 இலங்கை ரூபாயினை வழக்குச் செலவாக பிரதிவாதிகள் செலுத்த வேண்டுமெனவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னர் வர்த்தகர்களுக்கு வழங்கிய வரிச் சலுகைகள், அமெரிக்க டாலருக்கு நிகரான இலங்கை நாணயத்தின் பெறுமதியை



உயர்ந்த நிலையில் பேணியமை, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக் கொள்ளத் தாமதித்தமை, நாட்டின் நிதிக் கையிருப்பு பற்றாக்குறையாக இருந்த போது 500 மில்லியன் டாலர் பெறுமதியான பிணைமுறிகளை மீளச் செலுத்தியமை பிரதிவாதிகள் மேற்கொண்ட முக்கிய தவறுகள் என தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.





**குடியுரிமைகளை ரத்து செய்யக் கோரிக்கை**

இதனையடுத்து நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் தவறான தீர்மானங்களை எடுத்தார்கள் என, உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் பெயர் குறிப்பிடப்பட்ட நபர்களுக்கு சட்ட ரீதியாகத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும், அவர்களிடமிருந்து மக்களுக்கு நஷ்டஈடு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டுமெனவும் பல்வேறு தரப்பிலிருந்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

முன்னாள் ராணுவத் தளபதியும் தற்போதைய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா உள்ளிட்ட சிலர், "தீர்ப்பில் பெயர் குறிப்பிடப்பட்டவர்களின் சிவில் உரிமைகளை ரத்துச் செய்ய வேண்டும்," எனக் கூறுகின்றார்.

இந்த நிலையில், உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகளுக்கு அரசு வழங்கும் ஓய்வூதியம் உள்ளிட்ட சலுகைகள் அனைத்தையும் நிறுத்துமாறு ஜனாதிபதியைக் கோரும் கடிதமொன்றில், பொதுமக்களின் கையொப்பங்களைப் பெறும் நடவடிக்கையொன்றினை சில நாட்களுக்கு முன்னர் பிரதான எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஆரம்பித்தது.

அது குறித்து அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதிச் செயலாளருமான முஜீபுர் ரஹ்மான் கருத்துத் தெரிவிக்கையில், 'அவர்களுக்கு அரசினால் ஓய்வூதியம் உட்பட பல சலுகைகள் வழங்கப்படுகின்றன. உடனடியாக அவற்றினை நிறுத்த வேண்டும். அத்தோடு, அவர்களால் நாட்டுக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு என்பதை கணக்கிட்டு, அவற்றினை அவர்களிடமிருந்து எவ்வாறு பெறுவது என்பதை ஆராய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றும் அமைக்கப்பட வேண்டும். இதனை நிறைவேற்றுமாறு ஜனாதிபதியை வலியுறுத்தும் ஆவணமொன்றிலேயே மக்களின் கையொப்பம் திரட்டபட்டது" என்றார்.

இதேவேளை, நாட்டை வங்குரோத்து அடையச் செய்தவர்களுக்கு எதிராக உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்புக் குறித்து கருத்து வெளியிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக் குமாரதுங்க, "உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அரிய மற்றும் சிறந்த தீர்ப்பு" எனத்



தெரிவித்துள்ளார்.

"நீதிமன்றத்துக்கு மக்கள் சென்று, உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு தண்டனை வழங்குமாறும், அவர்களிடமிருந்து இழப்பீடு பெற்றுத்தருமாறும் கோர முடியும்" என, அவர் மேலும் கூறியுள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் தவறான தீர்மானங்களை எடுத்தவர்களின் வெளிநாட்டுக் கணக்குகள் மற்றும் நிறுவனங்களில் குவிக்கப்பட்டதாகக் கூறப்படும் பணம் அல்லது இலங்கையில் உள்ள காணிகள், ஹோட்டல்கள் மற்றும் குடியிருப்புகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படும் அவர்களின் பணம் ஆகியவற்றை பொலீஸ் விசாரணைகள் மூலம் கண்டுபிடித்து பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு அவற்றை இழப்பீடாக வழங்க பயன்படுத்த முடியும் எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குறிப்பிட்டுள்ளார்.

திருடப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கான உதவிகளை வழங்கும் தனிப் பிரிவை உலக வங்கி கொண்டுள்ளது என்றும், பிலிப்பைன்ஸின் அவ்வாறான சொத்துக்கள் மீட்கப்பட்டு அந்த நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவும், "பொருளாதாரம் தொடர்பில் தவறான தீர்மானங்களை மேற்கொண்ட மேற்படி நபர்களுக்கு எதிராக, மக்கள் - மாவட்ட நீதிமன்றங்களுக்குச் சென்று, இழப்பீடு கோர முன்வர வேண்டும்," என அழைப்பு விடுத்துள்ளார்.

இது இவ்வாறிருக்க உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வெளியானதை அடுத்து ஊடகங்களிடம் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, நாட்டு மக்களின் நலன் கருதியே தாம் தீர்மானங்களை மேற்கொண்டதாகவும், ஒவ்வொரு நபரையும் இலக்காகக் கொண்டு தீர்மானங்களை மேற்கொள்ளவில்லை எனவும் கூறினார்.

"மக்களின் நலன் கருதி எடுத்த சில தீர்மானங்கள் பொருந்தவில்லை, சில தீர்மானங்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. ஆனாலும், நல்லெண்ணத்துடனேயே அனைத்துத் தீர்மானங்களையும் மேற்கொண்டோம்" என, அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

**'நோய் கண்டுபிடிக்கப்பட்டது, மருந்து வழங்கப்படவில்லை'**

தவறான பொருளாதாரத் தீர்மானங்களுக்கு காரணமானவர்கள் என, உச்ச நீதிமன்றம் பெயர் குறிப்பிட்டு தீர்ப்பளித்துள்ள நிலையில், அவர்களுக்கான "அபராதம்" என்ன என்பது அறிவிக்கப்படாமையினால், சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுப்பது கடினமாகியுள்ளதாக, தென்கிழக்குப் பல்கலைக்கழத்தின் பொருளியல்துறை தலைமைப் பேராசிரியர் ஏ.எல். ரஊப் கூறினார்.

(16ம் பக்கம் பார்க்க)

# ஐஸ் போதைப் பொருளுடன் இளைஞர் திருமலையில் கைது!

கிண்ணியா, டிசெ. 04

திருகோணமலை -கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப் பொருளை தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் சனிக்கிழமை இளைஞரொருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவின் திருகோணமலை பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக குறித்த இளைஞரை பைசல் நகர் பிரதான வீதியில் வைத்து சோதனையிட்ட போது அவரிடமிருந்து 5 கிராம் 400 மில்லி கிராம் ஐஸ் போதை பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர் ஏற்கனவே ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவரை கைது செய்யும்போது குறித்த இடத்தில் இருந்து தப்பி ஓடியவர் எனவும் பொலிஸ் ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரை பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ள நிலையில் விசாரணைகளின் பின்னர் திருகோணமலை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)




மாவீரர் நாளை முன்னிட்டு இங்கிலாந்தின் - லெஸ்டர் நகர இரத்த தான நிலையத்தில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் இளையோரால் குருதிக்கொடை நிகழ்வு நடைபெற்றது.

# இலங்கை பொருளாதாரம் வீழ்வதற்கு...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு நாட்டின் பொருளாதரத்தை வீழ்ச்சியடையச் செய்து, அந்த நாடு வங்குரோத்து அடைவதற்கு காரணமாக இருந்தமை - மிகப் பெரிய குற்றம் எனத் தெரிவித்த அவர், "இதனைப் புரிந்தவர்களுக்கு எதிராக நாடாளுமன்றமும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது," என்கிறார்.

"உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் பொருளாதாரம் தொடர்பாக தவறான தீர்மானம் எடுத்தவர்கள் என, பிரதானமாக யாரெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளார்களோ, அவர்களின் அரசாங்கமே தற்போது உள்ளது. எனவே, நாடாளுமன்றத்திலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை எதிர்பார்க்க முடியாது" எனவும் அவர் கூறினார்.

அந்த வகையில், இவ்விவகாரத்தில் "நோய் கண்டறியப்பட்டுள்ள போதும், மருந்து வழங்கப்படவிலை," என தலைமைப் பேராசிரியர் ரஊப் குறிப்பிட்டார்.

**ஈஸ்டர் தாக்குதல் தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்**

இது இவ்வாறிருக்க, பொருளாதார ரீதியாக நாட்டைச் சீரழித்தமைக்காக பொறுப்புக் கூற வேண்டியவர்களாக ராஜபக்ஷக்களை உச்ச நீதிமன்றம் அடையாளப் படுத்தியுள்ளமையினால், அவர்களிடமிருந்து இழப்பீட்டை மக்கள் பெற்றுக் கொள்ள முடியுமென மூத்த சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் கூறியுள்ளார்.

பொறுப்புகூறலில் இருந்து விலகியமையால், அதற்கான இழப்பீட்டை பாதிக்கப்பட்ட மக்களுக்கு செலுத்த வேண்டும் என, ஏற்கனவே உச்ச நீதிமன்றம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான ஈஸ்டர் தாக்குதல் வழக்கில் தீர்ப்பளித்துள்ளமையினை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே அந்த வழக்கின் தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு, தனது தலைமையில் - ஏனைய எதிர்க்கட்சிகளின் சட்டத்தரணிகள் மற்றும் சிவில் தரப்பினருடன் இணைந்து, ராஜபக்ஷகளிடமிருந்து நஷ்டஈட்டைப் பெறுவதற்கான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது பற்றி ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உச்ச நீதிமன்றம் நஷ்டஈடு வழங்குமாறு உத்தரவிட்டிருந்தால், இந்த நாட்டிலுள்ள 2.2 கோடி மக்களுக்கும் வழங்குவதற்குப் போதுமான ராஜபக்ஷவினரின் பணம், நாட்டுக்கு வெளியில் உள்ளது என்றும் சுமந்திரன் நாடாளுமன்றத்தில் கூறினார்.

ராஜபக்ஷ சகோதரர்கள் நாட்டிற்கு வெளியே வைத்திருக்கும் பணத்தின் மூலம், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் ராஜபக்ஷவினரிடம் இழப்பீடு கோருவதற்கு உரிமை உள்ளது என்றும் சுமந்திரன் தெரிவித்தார்.

**மைத்திரிக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு என்ன?**

இலங்கையில் நடைபெற்ற ஈஸ்டர் தின குண்டு வெடிப்புத் தாக்குதல்களைத் தவிர்ப்பதற்குத் தவறியதன் ஊடாக, தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, பாதிக்கப்பட்ட தரப்பினரால் 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

அந்த மனுக்களில் தாக்குதல் நடைபெற்ற காலத்தில் ஜனாதிபதியாகப் பதவி வகித்த மைத்திரிபால சிறிசேன, அப்போதைய பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெணான்டோ, அப்போது போலீஸ் மாஅதிபராகப் பதவி வகித்த பூஜித் ஜயசுந்தர, அரச புலனாய்வு சேவையின் அப்போதைய பிரதானி நிலந்த ஜயவர்தன, மற்றும் தேசிய புலனாய்வு பிரிவின் அப்போதைய பிரதானி சிசிர மென்டீஸ் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்த போதிலும், அதைத் தடுப்பதற்கு பிரதிவாதிகள் நடவடிக்கை எடுக்காமையின் மூலம், தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் தெரிவித்திருந்தனர்.

இதனை ஏற்றுக் கொண்ட உச்ச நீதிமன்றம், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு மனுதாரர்கள் தமது சொந்தப் பணத்திலிருந்து நஷ்டஈடுகளைச் செலுத்துமாறு உத்தரவிட்டிருந்தது. அதன்படி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 100 மில்லியன் ரூபாயை நஷ்டஈடாகச் செலுத்த வேண்டும் என, உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ●

